Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | மார்கழி 15 | சனிக்கிழமை (31.12.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 91

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO


SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1105)



முதன் முதலாக

13



வாய்ப்பு வீணடிப்பு

07



சொந்த இடத்தை மறந்து

04



விவாதத்திற்கு அழைப்பு

08

## நெல்லியடியில் வெடிவிபத்து தாயும் மகளும் காயம்

(யாழ்ப்பாணம்)

பையொன்றில் அநாதரவாக இருந்த கைக்குண்டு ஒன்று வெடித்ததில் தாயும் மகளும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 11.00 மணியளவில் நெல்லியடி குடாவத்தை பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கோப்பாய் பகுதி வீதியோரத்தில் அநாதரவாகக் கிடந்த பாசலைக் கண்டெடுத்த குறித்த இருவரும் தங்கள் வீட்டுக்கு அதை கொண்டு சென்று திறந்த போது அதிலிருந்த குண்டு ஒன்று திடீரென்று வெடித்துள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகர சபையை சட்டநெருக்கடிக்குள் சிக்க வைக்க மேற்கொண்ட முயற்சி தோல்வி

(யாழ்ப்பாணம்)

கட்டுக்கோப்பான நிர்வாக நடைமுறைகளுடன் சிறப்புற இயங்கிவரும் யாழ். மாநகர சபையை சட்டச் சிக்கல்களுக்குள் சிக்கவைப்பதற்கு சபையின் எதிர்க்கட்சியினர் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்ததாகவும், இவ்வாறான முயற்சிகளை தாம் மிக வன்மையாக கண்டிப்பதாகவும் யாழ். மாநகர முதல்வர் நேற்று வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் 2011 ஆம் ஆண்டுக்கானதும் வருட இறுதியானதுமான 12 ஆவது கூட்டத்தொடர் இன்று நடைபெற்ற வேளை அதனைத் திட்டமிட்ட வகையில் குழப்பி, மாநகர சபையை சட்டச் சிக்கலுக்குள் தள்ளுவதற்கு எதிர்க்கட்சியினர் முயன்றதை வன்மையாகக் கண்டிப்பதாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

ஒரு வருடத்தில் மாநகர சபை 12 கூட்டங்களை நடத்தவேண்டும். இதில் இன்றைய தினம் இவ்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# எல்லைதாண்டும் மீனவர் விவகாரம்

# பேச வருகிறது இந்திய உயர் குழு

(கொழும்பு)

இந்திய, இலங்கை கடற்பகுதியில் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இரண்டு நாட்டு மீனவர்களது பிரச்சினை தொடர்பாக இரு நாட்டு பிரதிநிதிகளும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இரு நாட்டு அதிகாரிகளுக்குமிடையில் ஜனவரி 13 மற்றும் 14 ஆகிய தினங்களில் கொழும்பில் இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவிலிருந்து மத்திய மற்றும் மாநில அரசுகளின் பிரதிநிதிகள் வருகை தரவுள்ளனர்.

இதன்படி இந்திய மீன்பிடி அமைச்சின் பிரதிநிதிகள் பாதுகாப்பு, வெளிவிவகாரம், கடற்படை மற்றும் தமிழ்நாடு, ஆந்திர மாநிலப் பிரதிநிதிகளும் வருகை தரவுள்ளனர்.

எல்லைதாண்டும் இலங்கை மீனவர்கள் தமிழ்நாட்டில் மட்டும் கைதுசெய்யப்படவில்லை. எமது மீனவர்கள் ஆந்திர மாநிலம் குறிப்பாக விசாகப்பட்டினம், ஒரிசா மற்றும் அந்தமான் தீவுகளில் வைத்து கைதுசெய்யப்படுகின்றனர். இவ்வாறு அந்தமான் தீவுகளில் எமது மீனவர்கள் கைதாகும்போது அவர்களை விடுவிக்க மத்திய அரசுடன் தொடர்பு கொண்டாலும் விடுதலை என்பது நீண்ட காலத்தை எடுக்கிறது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## 15 ஆயிரம் பட்டதாரிகள் அரச சேவையில் இணைப்பு

(கொழும்பு)

அரச சேவையில் 15 ஆயிரம் பட்டதாரிகளை உடனடியாக உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


நிர்வாக சேவைக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்களை தெளிவுபடுத்துவதற்காக அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற செயலமர்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

இலங்கை நிர்வாக சேவைக்கு புதிதாக 296 அதிகாரிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் இவர்கள் அலரிமாளிகைக்கு சென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை

(15 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாணவன் தேசிய ரீதியில் சாதனை பெருமையடைகிறார் கல்வி அமைச்சர்



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவரொருவர் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் முதலாம் இடத்துக்கு வந்தமைக்கு கல்வியமைச்சர் என்ற வகையில் பெருமையடைவதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதத்தில் குறித்த மாணவரைச் சந்திக்கவும் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் கடந்த 30 வருட கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தில், பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் முயற்சியும், ஆர்வமும் இருந்தால் சாதிக்க முடியும் என்பதற்கு மாணவர் கமலவாசன் முன்மாதிரியாகத் திகழ்கிறார் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் 100 வீதம் சரியான

(15 ஆம் பக்கம் பார்க்க)

## காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

### கேட்கிறார் மனோ கணேசன்



(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு யோசனைகளில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் போர்க் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இராணுவ முகாம்கள் அகற்றப்படுவது ஆகிய முக்கிய விவகாரங்கள் தொடர்பில் இந்நாட்டின் பிரதான எதிர்க் கட்சித்தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க, சோமவன்ச அமரசிங்க, சரத் பொன்சேகா, கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாச ஆகியோர் தத்தமது நிலைப்பாடுகளை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். அதற்கான தீர்மானகரமான காலம் இன்று வந்து விட்டது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு • ஆனந்தகுமாரசுவாமி மாவத்தை புதிய நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நவசமசமாஜ கட்சியின் 34 ஆவது வருடாந்த மகாநாட்டில், 'ஜனநாயகத்தின் குழப்ப நிலையும், தேசிய இனப்பிரச்சினையும்'

(15 ஆம் பக்கம் பார்க்க)

## வரிச்சான்றிதழ் பரிசோதனை மார்ச் வரை கால அவகாசம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களூடாக வழங்கப்படவுள்ள 2012 ஆம் ஆண்டுக்கான வாகன வருமானவரி அனுமதிப் பத்திரங்கள் புதிய நடைமுறையின்படி வழங்கப்படவுள்ளது. இந்நடைமுறை காரணமாக ஏற்படும் காலதாமதத்தைக் கருதி வடமாகாண போக்குவரத்து பொலிஸார் வரிச்சான்றிதழ்களைப் பரீட்சிப்பதை எதிர்வரும் மார்ச் மாதம் வரை கால அவகாசம் வழங்கவுள்ளனர்.


இவ்விடயம் தொடர்பாக வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் பா.ஜெயகரன் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புதிய நடைமுறையின் பிரகாரம் வாகனம் பதிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும் வகையில் வரி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

இந்நடைமுறை புதிதாக அறிமுகப்படுத்தப்படுவதால் கணினியில் தரவுகளைப் பதியும் தேவையின் பொருட்டு, வழமையாக தேவைப்படும் ஆவணங்களுக்கு மேலதிகமாக வாகனத்தின் பதிவுச்சான்றிதழின்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகர சபையின் பிரதி மேயராக ரமீஸ்




(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் பிரதி மேயராக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினரான சட்டத்தரணி எம்.எம். ரமீஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

**நாளைய தினமுரசுடன் நான்கு வர்ண மாதாந்த பஞ்சாங்கக் கலண்டர் இலவச இணைப்பாக வெளிவருகிறது. தவறாது கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.**

# தமிழ் தலைமைகளிடையே புரிந்துணர்வு; அதற்கான உழைப்பு காலத்தின் கட்டாயம்



(யாழ்ப்பாணம்)

மலரப் போகும் புதுவருடத்தில் எமது மக்கள் எதிர்நோக்கி வரும் இன்னல்களுக்கு நிரந்தரத் தீர்வொன்று கிடைக்க வேண்டி நம் தமிழ் தலைமைகளுக்கிடையே இணக்கமான புரிதலொன்றுக்காக உழைக்க அனைத்து தரப்பினரும் முன்வருவது காலத்தின் கட்டாயமாகுமென ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் தெரிவித்தார்.

நிலையான சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் அதற்கான இணக்கப் பேச்சுக்கள் வெளிச்சக்திகளிடத்திடல் அல்ல, மாறாக அது சக தமிழ்க் கட்சித் தலைமைகளுடனேயே முதலில் இடம்பெற வேண்டும். தமிழ் மக்களுக்காக எதனை நாம் அரசுடன் பேச வேண்டும் என்பதில் எமது தமிழ் தலைமைகள் இணக்கமொன்றுக்குள் வர முடியாத நிலையில் கூட்டான தீர்மானமொன்றை அரசுக்கு விடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையினையே தமிழ்த் தரப்புக்கள் எதிர்கொண்டுள்ளன.

முதலில் இந்த நிலைமாற வேண்டும். எவ்வித முரண்பாடான நிலையிலும் எமது மக்களுக்காக ஒரே மேசையில் அமர்ந்து பேசுவதற்கான மன நிலையை எமது ஒவ்வொரு தமிழ்த் தலைவர்களும் கொண்டிருப்பது தீர்வு நோக்கிய முயற்சிகளுக்கு அவசியமானதொன்றாகும்.

இது விடயத்தில் சாத்தியமான வழிமுறைகளூடாக பயணிக்க வேண்டியதன் அவசியத்தை எமது கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா எப்போதுமே வலியுறுத்தி வந்திருக்கிறார்.

அவ்வாறே தெரிவுக் குழுவை நோக்கிய அரசின் அழைப்பையும் இன்றைய நிலையில் எமது மக்களின் நிரந்தரமான மகழ்ச்சியான வாழ்வுக்காக அதனை சாதகமாக நோக்குவதே சாதுரியமான ஒரு அரசியல் வழிமுறையாக இருக்கும்.

அதனை விடுத்து மக்களது துன்பங்களின் பெயரால் வெறும் வாக்கு வேட்டைகளில் மாத்திரம் நாம் கவனம் செலுத்துவோமாயின் அது எம் மக்களை மீண்டும் ஒரு அவலத்திற்குள் தள்ளிவிடும் செயலாகவே அமைந்து விடும். எனவே எதிர்வரும் புதுவருடத்திலாவது நம் தலைவர்கள் எம் மக்கள் கடந்து வந்த அவலங்களை இனியும் எதிர்கொள்ளாத வகையில் சாத்தியமான ஒரு தீர்விற்காக கூட்டாக உழைக்க அனைவரும் முன்வர வேண்டுமென அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வைத்தியசாலை இடமாற்றம்

இதுவரை காலமும் யாழ்ப்பாணம், கொட்டடியில் இயங்கி வந்த மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை எதிர்வரும் 02 ஆம் திகதி முதல் இல. 372, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு இடமாற்றப்படுகின்றது என்பதை மக்களுக்கு அறியத் தருவதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது.

# மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் 02.01.2012 திங்கட்கிழமை, 04.01.2012 புதன்கிழமை, 06.01.2012 வெள்ளிக்கிழமை மற்றும் 08.01.2012 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களிலும்,

03.01.2012 செவ்வாய்க்கிழமை, 05.01.2012 வியாழக்கிழமை மற்றும் 07.01.2012 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சாரசபை அறிவித்துள்ளது.

# மக்கள் வங்கி திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் வங்கியின் அனைத்து கிளை நிலையங்கள் மற்றும் சேவை நிலையங்களும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி நாளை திறந்திருக்கும் என பிராந்திய பொது முகாமையாளர் எஸ்.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை வங்கிச் சேவைகள் இடம்பெறும். இத்தினத்தில் புதிய கணக்குகள் ஆரம்பித்தல், சிறுவர் கணக்கு ஆரம்பித்தல் மற்றும் பண வைப்புகளையும் மேற்கொள்ள முடியும்.

ஏனைய சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெறும் என அவர் தெரிவித்தார்.(54)

## சிறு விளம்பரம்


### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1141)


## மகாபாரதம் சொற்பொழிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் அருளினால் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றது. அதன் பிரகாரம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பகல் 10.00 மணிக்கு பூசை நிறைவுற்றதும் ஆச்சிரம மண்டபத்தில் பண்டிதர் பொன். சுகந்தனின் மகாபாரதம் தொடர் சொற்பொழிவு நடைபெறவுள்ளது. (116)


நத்தார் புதுவருட பரிசில்களுக்கு

◆ சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகள்
◆ நவீன டிசைன், ரெடிமேட் ஆடைகள்
◆ நவநாகரிக நங்கையர்களுக்கேற்ற சல்வார், சுடிதார், ஸ்கேட் அன் பிளவுஸ் மற்றும் ஆடைகளுக்கும்
◆ ஆடவர்களுக்கான, சிறுவர்களுக்கான அனைத்து ஆடைத் தெரிவுகளிற்கும்

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 30 ஆயிரம் ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களிற்கு ஒரு வருட உத்தரவாதத்துடன் அழகிய கைத்தொலைபேசி ஒன்று வழங்கப்படும்



NO: 10,11 POWER HOUSE RD GRAND BAZAAR, JAFFNA (மலாயன் கபே முன்பாக)

இச்சலுகை 21.12.2011 முதல் 31.12.2011 வரை மட்டுமே

(C/1142)





சகல பரிகாரங்களுக்கும் மலையாள மாந்திரிகம்.

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை. ஜாதக கணிப்பை ஆணி வேர் அக்கு வேராக கணித்து தெரிந்த பின்பே மலையாள மாந்திரிக சக்தி அவர் அவருக்கு ஏற்ற உச்சாட்டம் செய்யப்படுகின்றது. கல்விஞான சித்தம் கிட்ட மட்டும் 9 மாதத்துக்கு முன்பே பரிகாரம் செய்து கொள்ள வேண்டும். அதி விஷேடமாக வெளிநாட்டவருக்கு என அவர்கள் எண்ணங்கள் நிறைவேறும் வண்ணம் வியாழக்கிழமை தோறும் இங்கு மாந்திரிக உச்சாடங்கள் செய்யப்படுகின்றன. உள்நாட்டவருக்கென இம்மாதக்கடைசியில் வரும் திகதியில் காலை 09 மணி முதல் மாலை 05 மணிவரை அக்கினி குண்டல யாக பூஜைகள் நடைபெறும். இங்கு தீய வேலைக்கு இடமில்லை. இரகசியம் பேணப்படும். எம்மதத்தினருக்கும் சேவை உண்டு. சகல குறை நிறைகளுக்கும் முன் அறிவித்தலுடன் நேரத்தை ஒதுக்கி வந்தால் மட்டுமே என்னை சந்திக்கலாம்!

தேசபந்து, பேராசிரியர், துர்க்கைதாசன் கலாநிதி P.K. சாமி J.P ஐயா!

அருள்ஞான சித்த இல்லம். ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்.

23. மேபீல்ட் ரோட் கொழும்பு - 13. தொ.பே: 011 2342463, 011 2342464, 011 2470615

நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி இல்லம்

இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

நுவரெலியாவிலும் ராகு கால பூஜை தினந்தோறும் நடைபெறும்.

(C/1102)



www.peoplesbank.lk

அனைவருக்கும் மக்கள் வங்கியின்

புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்



பிறந்ததிலிருந்து 05 வயது வரையான குழந்தைகளுக்கான கணக்கு. ஆகக்குறைந்த வைப்புத் தொகையாக ரூபா 100/-ஐ செலுத்தி கணக்கினை ஆரம்பிக்கலாம்.

இசுறு உதான

ஒரு குழந்தைக்கு வழங்கக்கூடிய புத்திசாலித்தனமான பரிசு

புதுவருட தினத்தை முன்னிட்டு 2012.01.01 (ஞாயிற்றுக் கிழமை)

சகல வங்கிக்கிளைகளும், சேவை நிலையங்களும்

காலை 9.00 மணிமுதல்

பிற்பகல் 12.30 மணிவரை

திறந்திருக்கும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இவ்வேளையில்,

✷ புதிய கணக்குகளை ஆரம்பித்தல்

✷ பணவைப்புச் செய்தல்

மற்றும் ஏனைய மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.



05-18 வரை வயதுள்ள பிள்ளைகளுக்கான கணக்கு

சிசு உதான

சிறந்த எதிர்கால சந்ததியினர்

AAA-Brand Finance Rating, AA (lka) Fitch Rating

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

> இறைவனின் பாதம் தர்மத்தையும், கைகள் மோட்சத்தையும், முகம் இறை வடிவத்தையும் காட்டுகிறது. இவற்றுள் இறைவனின் பாதமே மிக உயர்ந்தது. எனவேதான் இறைவனின் திருவடிகளைப் பூஜிக்கச் சொல்கிறார்கள் பெரியோர்.
>
> -பாபா.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## இந்த வருடக் கலண்டரில் 'அந்த நாள்' உண்டா?

பண்டிகைகளும் விடுமுறைகளுமாக, வருடம் முடிந்து மறுவருடம் பிறக்கும் காலப்பகுதி கொண்டாட்டம் நிறைந்ததுதான். நாளை புது வருடம், அதையடுத்து பொங்கல் என்று விசேட தினங்கள் யாவுமே நாம் விசேட மகிழ்ச்சி கொள்வதற்காக வருபவை.

இன்று இந்த ஆண்டின் கடைசிநாள். ஆண்டுகள் நம்மைப் பிரிந்து செல்கின்றன. நமது மக்கள் எதிர்நோக்கியிருக்கும் நிரந்தரத் தீர்வொன்றுக்கான ஏக்கம் நம்மை விட்டு நீங்கிச் செல்லக் காணோம்.

ஆண்டுகள் விஷயத்தில் ஒரு வாசல் மூட மறுவாசல் திறக்கிறது. 2011 விடைபெற்றுப் போக 2012 புதிய நம்பிக்கைகளுடன் வருகிறது. நமது மக்களின் நல்வாழ்வுக்கான வாசலை வரும் ஆண்டேனும் திறக்குமா என்பதே நம் எதிர்பார்ப்பு.

நாளைகளின் மீதான நம்பிக்கைதான், இன்றைய வாழ்வைச் சகித்துக் கொள்ள உதவும் வலி நிவாரணியாக இருக்கிறது. அதற்காக, நிவாரண மாத்திரைகளுடனேயே காலங்கடத்திவிட முடியாது. வலிகள் நீங்கும் வழியை நாம் கண்டாக வேண்டும்.

தமிழ்மக்களின் பிரதிநிதிகளாகத் தங்களை முன்னிறுத்துபவர்கள், மக்களுக்கான வழியைச் சொல்லும் பொறுப்பைத் தட்டிக்கழித்து விட முடியாது. "அரசு எதையும் தரப்போவதில்லை, இந்த நாட்டுக்குள் பேசித் தீர்வு காணமுடியாது. பேரினவாத சமூகத்தோடு பேச்சுக்கே இடமில்லை..." என்பன போன்ற எதிர்மறைக் கோஷங்கள் தீர்வுக்கு நகரும் வழியாக அமையமுடியாது. வெளியே இருந்துதான் நமக்குத் தீர்வு வரும் என்ற வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன் காலத்து 'மாயமான் காட்டல்' களையும் காட்டி இனியும் ஏமாற்றிக் கொண்டிருக்கக்கூடாது.

இந்த நாட்டுச் சிறுபான்மை மக்களின் பிரச்சினை பற்றி கருத்துச் சொல்ல உருவாக்கப்படும் 'சிவில் சமூக' குழுவில் ஒரு முஸ்லிமைக் கூட உள்வாங்க முடியாத நிலைமையில்தான் இந்தப் பக்கமும் தேசியவாதம் இனவாதமாகக் கோலோச்சுவதையும் நாம் கவனித்துக் கொள்ள வேண்டும்.

இந்த வாதங்கள், விரிசல்கள், விளாசல்கள் மூலம் மக்களுக்கு வெறும் உணர்ச்சியாவேசத்துடன் உருக்குலைந்த வாழ்வைத்தான் தொடர்ச்சியாக அளிக்கலாமே தவிர, தீர்வையோ கஷ்டங்கள் நீங்கிய வாழ்வையோ கொண்டுவர முடியாது. அதற்கு இவர்கள் தாங்கள் உணர்ந்துகொண்டிருக்கும் யதார்த்த நிலைமைகளை மக்களுக்கும் வெளிப்படையாகச் சொல்ல நேர்மையுடன் முன்வரவேண்டும்.

ஆங்கில பழமொழி ஒன்றுண்டு: "புத்திசாலிகள் – நாளைய வேலையை இன்றைக்கே செய்கிறார்கள். சராசரிகள் – இன்றைய வேலையை இன்றைக்குச் செய்கிறார்கள். மூடர்கள் – நேற்றைய வேலையை இன்றைக்குச் செய்கிறார்கள்."

நேற்றைய வேலைகளின் தோல்விகளை அறிந்துகொண்டும், இன்றைக்கு அதையே செய்துகொண்டிருக்க வேண்டாம். புதிய வழிகளை நோக்கிய தேடலுக்கு புதிய ஆண்டாவது நம் கண்களைத் திறக்கட்டும்.

காலம் நதியாக ஓடிக்கொண்டிருக்கிறது. நாமெல்லாம் அதில் கொஞ்சக் கொஞ்சத் தூரம் பயணிப்பவர்கள்தான். புதிய புதிய பூமியையும், புதிய புதிய எழில்களையும் சந்திக்க ஓடிக்கொண்டிக்கும் நதியின் ஓட்டத்தில் விலகி, நாம் வலிந்து பாறைகளில் மோதி நிற்க வேண்டாம்.

சின்னச் சின்ன பிடிவாதங்கள் நம்மைச் சீரழிக்க அனுமதிக்க வேண்டாம். பெரிய தேவைகளுக்கான சிறு விட்டுக்கொடுப்புகளும், இணங்கச் செய்வதற்காக இணங்கிப் போவதும் நம்மை வீழ்த்திவிடப் போவதில்லை. மறுதரப்புக்களையும் புரிந்துகொள்ளும் விசாலப் பார்வை பெற்றுவிட்டால் நமது வழிக்கு அவர்களையும் இணங்க வைக்கும் விவேகம் கைகூடிவிடும்.

பெரிய விஷயங்களைச் சாதிப்பதற்காக சில பிரச்சினைகளை நாம் சிறிதாக்கிக் கொண்டுவிட முடியும். அதனால் நாமொன்றும் தாழ்ந்துவிடப் போவதில்லை. மலை தடுக்கி யாரும் விழுவதில்லை; சிறு கல் தடுக்கியே விழுகிறோம் என்பதைப் புரிந்துகொள்வோம்.

மறுதரப்புகளை நாம் நம்பமுடியாமற்போவது, அவர்கள் நம்பும்படியாக நாம் நடந்துகொள்ள முடியவில்லை என்பதனால்தான். 60 வருடகால இந்த முடிச்சை அவிழ்க்க, எங்கள் பக்கத்து விருப்பத்தைச் சரிவரத் தெரியப்படுத்துவோம். நாம் வைத்திருக்கும் கயிற்றின் ஒருமுனையை இழுத்துக்கொண்டு நின்றால் முடிச்சு இறுகுமே தவிர, ஒருபோதும் அது அவிழும் நிலைக்கு வராது.

நகரும் கால நதியோடு சேர்ந்து கொள்வோம்; புதிய அழகை புதிய தரிசனத்துடன் கண்டுகொள்ள வரும் வருடத்தைப் பயன்படுத்துவோம்.

– ஆசிரியர்

# சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும்

## கோருகிறார் ஜயலத் ஜயவர்த்தன

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு, சுயாதீன நீதிமன்ற ஆணைக்குழு ஆகியன நிறுவப்பட வேண்டும். தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் 17ஆம் திருத்தச் சட்ட மூலத்தை, மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி இரத்துச் செய்தது. எனினும் நல்லிணக்க ஆணைக்குழு மறைமுகமாக 17ஆம் திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துமாறு கோருகின்றது.

13ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். அல்லது 17 ஆம் திருத்தச் சட்டத்தினைப் போன்றே 13ஆம் திருத்தச் சட்டமும் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்றார்.

# ஆழ்கடலில் நிர்க்கதியாகியுள்ள மீனவர்களுடன் தகவல் பரிமாற்றம்

(கொழும்பு)

ஆழ்கடலில் நிர்க்கதியாகியுள்ள இரண்டு மீன்பிடிப் படகுகளுடனும் தகவல் பரிமாற்றம் இடம்பெற்றுவருவதாக இடர்முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இந்தப் படகுகளின் பாதுகாப்புத் தொடர்பில் கடற்படையினரைத் தெளிவுபடுத்தியுள்ளதாக நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கடற்பிரதேசங்களில் நிலவும் கொந்தளிப்புத் தொடர்பில் மீனவர்களைத் தெளிவூட்டும் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம்.

முல்லைத்தீவுக்கு அப்பால் உள்ள கடற்பிராந்தியத்தில் இரண்டு மீன்பிடிப் படகுகள் நிர்க்கதியாகியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளன.

எவ்வாறாயினும் அந்தப் படகுகளில் உள்ள மீனவர்களுடன் தொடர்ந்தும் தகவல்கள் பரிமாறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆபத்தான பிரதேசத்தில் இருந்த மீனவர்கள் பாதுகாப்பான பகுதிகளை நோக்கி வந்தவண்ணமிருக்கின்றமை தற்போதைய தகவலின் மூலம் தெரியவந்துள்ளதாக இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# உயர்தரப் பரீட்சையில் 3687 பேருக்கு மூன்று பாடங்களில் "ஏ" தரச் சித்தி

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மூவாயிரத்து 687 மாணவ மாணவியர் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விஞ்ஞான பிரிவில் பரீட்சைக்கு தோற்றியவர்களில் 422 மாணவர்களும், கணிதப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 317 மாணவர்களும், வர்த்தகப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 800 மாணர்களும், கலைப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 2146 மாணவர்களும் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் இருபத்து மூவாயிரத்து 333 பேர் மூன்று பாடங்களிலும் சித்தியெய்தவில்லை எனவும் ஒரு இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றுக்கொள்ளக் கூடிய பெறுபேறுகளை ஈட்டியுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய 60 வீதமானவர்கள் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றுக் கொள்ளக் கூடிய அடிப்படை தகமைகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# கடத்தப்பட்ட தமிழ் வர்த்தகர் சடலமாக மீட்கப்பட்டார்

(கொழும்பு)

மோதரைப் பிரதேசத்தில் வைத்து கடந்த புதன்கிழமை இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்ட மீன் வர்த்தகர் நேற்றுமுன்தினம் இரவு தொட்டலங்க பிரதேசத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சடலத்தை தொட்டலங்கப் பிரதேசத்திற்கு அண்மித்த பகுதியில் இரவு 8.30 மணியளவில் பிரதேச வாசிகள் கண்டுள்ளனர். இதனையடுத்து கிராண்பாஸ் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

ராஜேந்திரன் முரளிதரன் (வயது 36) என்பவரே கொல்லப்பட்டவர் என இனங்காணப்பட்டுள்ளார். இவர் முச்சக்கர வண்டியைச் செலுத்திச் சென்றபோது மோதறை பெர்னாண்டோ மாவத்தையில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

# பாலாவி கத்தோலிக்க தேவாலயம் நவீன முறையில் புனரமைப்பு

(புத்தளம்)

இயேசுநாதரின் இதயம் எனும் திருநாமத்தைக் கொண்ட புத்தளம் பாலாவி கத்தோலிக்க தேவாலயம் நவீன முறையில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் தேவாலயத்தின் புனரமைப்புப் பணிகளுக்கென பொதுமக்களின் பங்களிப்பில் இருந்து பெறப்பட்ட 25 இலட்சம் ரூபா நிதியைக் கொண்டு புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க.வுக்குத் துரோகமிழைத்தவர்களின் பெயர்கள் ஜனவரி 4 இல் வெளியிடப்படும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குத் துரோகம் இழைத்தவர்களின் பெயர்கள் வெளியிடப்பட உள்ளதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கட்சி ஒழுக்க விதிகளை மீறியமைக்காக இவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படக் கூடுமென ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் சிங்கள பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் 4 ஆம் திகதி கட்சிக்கு எதிராகச் செயற்பட்டவர்களின் பெயர்கள் அம்பலப்படுத்தப்படும் என்றும், கட்சித் தலைவரை பகிரங்கமாக விமர்சனம் செய்து வரும் கிளர்ச்சிக் குழுவைச் சேர்ந்த சிலரின் பெயர்கள் ஏற்கனவே இந்த பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் டக்ளஸின் சேவையால் மிளிர்ந்து வருகின்றது நெடுந்தீவு

## பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன்

(நெடுந்தீவு)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமாகிய கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தன்னிகரில்லா சேவையால் நெடுந்தீவு மிளிர்ந்து காணப்படுகின்றது என நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு பிரதேச சபையின் சார்பில் விடுத்துள்ள புதுவருட வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நெடுந்தீவு கிராமமானது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு 8 கடல் மைல் தூரத்தில் அமைந்துள்ள ஒரு பெரிய தீவாகும். இக கிராமத்தில் பல்வேறு தரப்பட்ட தொழில்களை மேற்கொள்ளும் மக்கள் வசிக்கின்றனர். தனியான ஒரு உதவி அரசாங்கத்திபர் பணிமனையும், 6 கிராம சேவகர் பிரிவையும், ஒரு பிரதேச சபையையும் கொண்டதாகும். இப்பிரதேச சபையைத் தொடர்ந்து இரண்டு முறை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியே ஆட்சி செய்து வருகின்றது. அந்த வகையில் 1991ஆம் ஆண்டு மார்கழி மாதம் 24ஆம் திகதி எம் தீவகத்திற்கு வருகை தந்து இன்று வரை அவர்கள் ஆற்றும் சேவை அளப்பரியது.

ஜனாதிபதியும் அவர் தம் அமைச்சர்களும் எமது தீவகத்தின மீது அதி கரிசனை கொண்டு சேவையாற்றுவதை இட்டு அவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

எமது பிரதேச சபையில் தலைவர் உட்பட 8 அங்கத்தவர் ஈழமகள் ஜனநாயகக் கட்சி சார்பிலும் ஒரு அங்கத்தவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பிலும் இருந்து சபை சேவைகள் நடந்து வருகின்றன. சபை தொடங்கிய இவ்வருடத்திலிருந்து பல்வேறு பட்ட சேவைகளை ஆற்றி வருகின்றது. எமக்கு வெற்றியைத் தேடித் தந்த மக்களுக்கே என்றும் எமது சேவையைச் செய்ய வேண்டுமென்ற அவாவில் இவ்வருடம் பல அபிவிருத்தி வேலைகளை நாம் நடைமுறைப்படுத்தி வருகின்றோம். அந்த வகையில் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி, குளங்கள், வீதிகள் புனர்மைப்பு, பெர்துசன கேட்போர் கூடங்கள், இறங்குதுறை புனரமைப்பு, 24 மணி நேர மின்சாரம், பாடசாலைகளுக்கான கட்டடம் அமைத்தல் போன்றவற்றை நாம் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றோம்.

எமது பிரதேசத்தை வள முளஎதாக வளர்த்தெடுப்பதற்கு நானும் எமது சக உறுப்பினர்களும் என்றும் உங்களோடு தோள் நின்று உழைப்பதற்கு மக்களும், பிரதேச சபை, அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு "செய்வதை சொல்வோம் சொல்வதைச் செய்வோம்" என்ற வாக்கிற்கு அமைய சேவை தொடர வாழ்த்தி 2012 புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

## பயிற்சி வகுப்பு

(வேலணை)

பாரம்பரியமான இசை நடன, சித்திரம் மற்றும் மிருதங்கம், வயலின் ஆகிய துறைகளில் மாணவர்களை வளர்த்தெடுத்து அவர்கள் மூலமாக இவற்றுக்கு மீண்டும் புத்துயிர் அளித்து வருவதற்கென இத்துறைகளில் தேர்ச்சி பெற்ற கலைஞர்கள் மூலம் அவர்களை பயிற்றுவிப்பதற்கான பயிற்சி வகுப்புகள் யாழ். நகரில் விரைவில் ஆரம்பிக்கப் படவிருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (05)

## வன்னி ஆசிரியர்களின் இணைப்புக்கள் இரத்து

(நெல்லியடி)

வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக கடமையாற்றும் ஆசிரியர்களின் இணைப்புக்கள் அனைத்தும் இவ்வருடத்துடன் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் வயலக் கல்விப் பணிமனைகளுக்கு கடிதமூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த மாதம் 30ஆம் திகதி இலங்கை ஆசிரியர் சங்கம், வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் வடமாகாண ஆளுநர் நடத்திய சந்திப்பை அடுத்தே மேற்படி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வன்னிப் பகுதியில் முக்கியமான பல பாடங்களிற்கு ஆசிரியர் தட்டுப்பாடு நிலவுவது குறிப்பிடத்தக்கது. (12)

## சந்தைக் குத்தகையில் முறைகேடு பரு.நகரசபைக்கு எதிராக கண்டனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையிலும் சந்தைக் குத்தகைவிடயத்தில் முறைகேடு எனகுத்தகைக்காரர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை நகரசபை, மந்திகையில் உள்ள சந்தையை 2012 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு கொடுத்துவிட்டு தற்போது சந்தைக்குள் புதிய கட்டடம் அமைத்து அதனைக் குத்தகைக்கு. கொடுப்பதற்கு புதிய கேள்வி அறிவித்தல் விளம்பரம் செய்துள்ளது என தற்போது சந்தையை குத்தகைக்கு எடுத்தவர் தெரிவித்துள்ளார்.

இது முறைகேடான செயல் எனத் தெரிவித்த அவர் நியாயமாக நடந்து கொள்ளாத பட்சத்தில் தான் நீதிமன்றம் செல்லவிருப்பதாகவும் தெரிவித்தார். இதேவேளை வல்வெட்டித்துறை சந்தைக்குத்தகையிலும் முறைகேடுகள் இடம்பெற்றமை யாவரும் அறிந்ததே.

## சொந்த இடத்தை மறந்து வெளியிடங்களில் பணிபுரியும் கிளிநொச்சி வைத்தியர்கள்

(கிளிநொச்சி)


கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்ட காலமாக வைத்தியர்களுக்கான பற்றாக்குறை நிலவி வருகிறன்றயைால் தம்மால் மக்களுக்கு நிறைவான சேவையினை வழங்கமுடியாதுள்ளதாக கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினர் தெரிவிக்கின்றனர்.

வருடந்தோறும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து ஐந்து மாணவர்கள் யாழ் பல்கலைகழக மருத்துவபீடத்திற்கு தெரிவாகி செல்கின்றனர். இதன்படி வருடந்தோறும் ஐந்து மாணவர்கள் வைத்தியர்களாக பல்கலை கழகத்தலிருந்து வெளியேறுகின்றபோதும் எவரும் கிளிநொச்சிக்கு கடமையாற்ற வருதில்லை. இம்மாவட்டத்தின் குறைந்தளவான வெட்டுப்புள்ளியினை பயன்படுத்தி பல்கலைக் கழகம் செல்கின்ற இவர்கள் வைத்தியர்களாக வெளியேறுகின்ற போது மாவட்டத்தினை மறந்து விடுகின்ற துரதிஷ்ட்டமே கடந்த 1983 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு சொந்தமான 121 வைத்தியர்கள் வசதிவாய்ப்புக்கள் நிறைந்த வெளிமாவட்டங்களில் கடமையாற்றி வருவதாகவும் மேற்படி பணிமனையினரால் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை குறிப்பிட்ட ஒருசில வைத்தியர்கள் தாமாக முன்வந்து கிளிநொச்சிக்கு சேவையாற்ற வருகின்ற வரவேற்கத்தக்க நிகழ்வுகளும் இடம் பெறுகிறது.

இதனை விட வெளிநாடுகளில் தங்களுடைய சொந்த பணத்தில் பல இலட்சங்களை செலவு செய்து கற்ற வைதியர்கள் விரும்பி கிளிநொச்சியில் சேவையாற்றுகின்றனர் ஆனால் இம்மக்களின் வரிப்பணத்தில் கற்றவர்கள் இம்மாவட்டத்தை மறந்து விடுகின்றமை வேதனைகுரியது எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.(29)





யாழ். மரியன்னை தேவாலயத்தின் ஒளிவிழாவின்போது நடத்தப்பட்ட போட்டிகளில் கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற சட்டத்தரணி யோணி மதுரநாயகம் பிரதமவிருந்தினர் அருட்திரு ஜோசப் பிரான்சிஸ் அடிகளாரிடம் பரிசிலை பெற்றுக் கொள்வதையும், கலைநிகழ்வு ஒன்றினையும் காணலாம். (52)

## அளவெட்டியில் நடமாடும் சேவை

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பொலிஸ் நிலையம் நடாத்தும் நடமாடும் சேவை இன்று காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திரன், தெல்லிப்பளை பிரதேச செயலர் எஸ். முரளிதரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

இந்நடமாடும் சேவையில் முறைப்பாடுகள் செய்தல், முறைபபாட்டு பிரதிகள் வழங்கல், முறைப்பாடுகள் சம்பந்தமான விசாரணைகள், தேசிய அடையாள அட்டை, கடவுச் சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம், காணி சம்பந்தமான சேவைகள் மற்றும் கிராம அலுவலர்களினதும் சமுர்த்தி உத்தியோகத்தர்களினதும் பிரதேச செயலகத்தின் அனைத்துச் சேவைகளையும் பிரதேச சபையினது ஆயுர்வேத வைத்தியம், துவிச்சக்கர வண்டி இலக்கத் தகடுகள், பிரதேச சபையினது அனைத்துச் சேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

நடமாடும் சேவையில் பங்கு பற்றும் மக்களுக்கான மரக் கன்றுகளும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, இந்நிகழ்வின் போது காட்சி கரப்பந்தாட்டப் போட்டி ஒன்றும் இடம்பெறவுள்ளது. (93)

## அனுபவ பகிர்வு போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கூட்டுறவுத்திணைக்கள உத்தியோகத்தர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்குமிடையே அனுபவப் பகிர்வு 2011 நிகழ்வில் நடத்தப்பட்ட போட்டிகளில் தமிழ் பாட்டிலும், தலையணைச் சமரிலும் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் முதலாம் இடங்களைத் தட்டிக் கொண்டனர்.

போட்டிகள் யாவும் எம்பிலிப்பிட்டிய திறந்த வெளி அரங்கில் கடந்த 23ஆம் திகதி நடைபெற்ற அனுபவப் பகிர்வு நிகழ்வின் போது இடம்பெற்றது. அனுபவப் பகிர்வு நிகழ்வில் இடம்பெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

கரப்பந்து இரண்டாமிடம், வலைப்பந்து இரண்டாமிடம், 200X4 அஞ்சல் ஓட்டம் (15-30 வயது) இரண்டாமிடம் ஆண்கள், 100X4 அஞ்சல் ஓட்டம் (30 வயதிற்கு மேல்) மூன்றாமிடம் (ஆண்கள்), 50 மீற்றர் ஓட்டம் (15 வயதின் கீழ் பெண்கள்) இரண்டாமிடம், தமிழ் பாட்டு முதலாமிடம், தலையணைச் சமர் முதலாமிடம், விநோத உடைப் போட்டி இரண்டாமிடம்.

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

(பருத்தித்துறை)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மேலும் சில பாடசாலைகளின் முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

**நெல்லியடி மத்திய ம. வி.**

கணிதப் பிரிவு

க. பிரதீப் 3ஏ, த. ஆரண்யா 2ஏ,பி, மே. ஜோ. ரோஜர் ருவீனஸ் ஏ,பி,சி.

உயிரியல் பிரிவு:

உ. பிரணவதர்சன் ஏ,பி.சி, பே. அபிதா 2பி,சி, கி. அபர்ணா பி,2சி, கு. துஷாந் பி,சி.எஸ், கி. கஜாதா பி.சி.எஸ், தே. பாமினி 2பி,எஸ்.

வர்த்தகப் பிரிவு

ப. பரதன் ஏ,பி.சி, இ. துஷ்யந்தன் ஏ,பி.சி,

கலைப்பிரிவு

அ. சஞ்சீவன் 3ஏ, கு. நிஷாளினி 2ஏ,பி, ச. ஆர்த்தியா ஏ,2பி, அ. ஞா. லூக்காஸ்நீல் ஏ,2பி, ஞா. ரேணுகா ஏ, 2பி, சி. கவிப்பிரியா ஏ,2பி, ஆ. நரேன் ஏ,2பி.

**மகாஜனாக் கல்லூரி**

கணிதப் பிரிவு

க. கோகுலன் 2ஏ,சி, இ. ஜதீஷன் 2ஏ,சி, தி. மயூரன் ஏ,பி.சி, வா. சுவேதாரண்யன் ஏ,பி.சி, ந. கிரிஷாந் ஏ,பி.சி.

வர்த்தகம்

சொ. ஜெயசாந்தன் ஏ,2பி, த. கஜனி பி,2சி,


உயிரியல் பிரிவு

பு. திருமாறன் 3பி, யோ. கார்த்திகா 2பி,சி.

கலைப் பிரிவு

சை. தர்மிலா 3ஏ, நி. ஷர்மி 3ஏ, ஜெ. கஜாணி 2ஏ,பி, ரா. தனஞ்சயன் 2ஏ,பி, செ. சரண்ராஜ் 2ஏ,பி, ச. கௌசிகா 2ஏ,பி, ஜெ. பாரதி 3பி, ஆ. காயத்திரி 3பி, க. சியாமினி 3பி, மு. திவாகினி 2பி,சி, இ. பிரதீப் 2பி,சி, சி. ஜெருசாந்தினி 2பி,சி, பா. குருகதா 2பி.சி. (93)

# யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் தேவைகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு



யாழ்.ஏழாலை சைவ சண்மார்க்க வித்தியால யத்தின் அபிவிருத்தி மற்றும் தற்போதைய தேவைகள் தொடர்பிலான விசேட கலந்துரையாடலொன்று கடந்த புதன்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது தலைமையில் நடைபெற்றது.

அமைச்சர் அவர்களது யாழ்.அலுவலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப் பட்டுள்ளதுடன் வெகுவிரைவில் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் அதிபர் நியமனம் உட்பட பல்வேறு தேவைகள் தொடர் பில் விசேட கலந்துரையாடலொன்று கடந்த புதன்கிழமை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது தலைமையில் இடம் பெற்றது.

யாழ்.மாநகர சபை உறுப்பினர் சுபியான் மற்றும் யாழ். முஸ்லிம் மக்களது கல்விச் சமூகம் சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்ட இக் கலந்துரையாடலில் யாழ்.முஸ்லிம் மக்களின் கல்வித்துறை நிலைப்பாடுகள் குறித்து எடுத்து ரைக்கப்பட்டன.

பல்வேறு தேவைகளுக்கு முகங்கொடுத்திருக்கும் யாழ். முஸ்லிம் மக்களின் கல்வித் துறை உட்பட அனைத்துத் துறைகள் சார்ந்தும் உரிய அவதானஞ் செலுத்தப்பட்டு சாதகமான தீர்வுகள் எட்டப்படுமென இதன் போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் அவர்கள் வெகுவிரைவில் மேற்படி கல்லூரியின் தேவைகளை நிறைவேற்றுவதாகவும் உறுதியளித்துள்ளார்.



கொழும்பில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட புள்ளி விபரத்தலைவர்களுக்கான கூட்டத்தின் போது தொகை மதிப்பு அத்தியட்சகரும், தொகைமதிப்பு புள்ளிவிபரத் தலைவருமான திருமதி டி.பி.பி.எஸ். வித்தியாரட்ணவின் சேவையைப்பாராட்டி மன்னார் மாவட்ட புள்ளிவிபரவியலாளர் மனுவல் வித்தியானந்த நேசன் நினைவுச்சின்னம் வழங்குவதை படத்தில் காணலாம்.

# இணையத்தள சேவையில் செய்தியை அறிக்கையிடும் பணி

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க இணையத்தளமான தமிழ் க்த்தோலிக்க செய்தி லங்கா இணையத்தளம், இலங்கை மறைமாவட்டங்களின் தமிழ் கத்தோலிக்க செய்திகளை அறிக்கையிடும் பணியை கடந்த மாதம் 26ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ளது.

இலங்கை செய்திகள், உலக செய்திகள் இணையத்தள இணைப்புக்கள், காணொளிகள், படங்கள் விளம்பரங்கள் என பல அம்சங்களுடன் வெளிவரும் இவ்விணையத்தளத்தை tcnlnet.com முகவரியில் பார்வையிட முடியும். செய்திகள், படங்கள் காணொளிகளை இணையத்தளத்தில் இணைக்க விரும்புவோர் info@tcnl.com அல்லது பிசப்சவுந்தரம் மீடியா சென்ரர் 891, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இளையோர் வீட்டுத்தோட்டத்தில் ஈடுபட்டால் குற்றச்செயல்களில் இருந்து விடுபடலாம்

### யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார்

(யாழ்ப்பாணம்)

இளைஞர்,யுவதிகள் வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கையில் கவனத்தைச் செலுத்தினால் குற்றச் செயல்களைத் தவிர்க்க முடியுமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

விவசாயத் திணைக்களத்தில் நடைபெற்ற வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது 43 ஆயிரத்து 500 குடும்பங் களுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைக் கான விதைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

அவ் விதைகளைப் பயன் படுத்தி வீட்டில் வீட்டுத்தோட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வந்தால் வருமானம் பெறக்கூடி யதாகவும் இருக்கும் அதே வேளை அவர்களின் கவனம் முழுவதையும் பயிர்ச் செய்கையில் செலுத்த முடியும் அவ்வாறு செய்வதன் மூலம் குற்றச் செயல்களிற்கு நேரத்தைச் செல விட முடியாது அதன் மூலம் நம்மைப் பாதுகாக்கவும் முடியும் விவசாயத்தை மேம்படுத்தவும் முடியும்.

அரச திணைக்களங்களின் செயற்பாடு தொடர்பான ஒவ் வொரு தகவல்களும் கிராம மக்களைச் சென்றடைய வேண்டும் எந்தவொரு தகவல்களும் கிராம மக்களுக்கு சென்றடைவதில்லை அதனாலேயே கிராம மட்டத்தில் குற்றச்செயல்களும், துஷ்பிரயோகங்களும் அதிகரிக்கின்றன.

வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கை இனிவரும் காலங்களில் கிராம மக்களிடையே சென்றடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விவசாய பணிப்பாளரிடம் வேண்டு கோள்விடுத்தார். (எஸ்)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(31.12.2011 –சனிக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
மார்கழி 15 ஆம் நாள்.
இராகுகாலம் 9.29-10.59, சுபநேரம் 3.29 -4.59 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி மாலை . 5.32 வரை
திதி: சதுர்த்தி பி.ப. 12.52 வரை
திதி: ஸப்தமி பி.இ.1.09வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், அயல்வீடு நட்பு, தூரத்திலிருந்து நற்செய்தி, தேகம் பலம்.

**ரிஷபம:**–குடும்பத்தில் கவலை, காசுக் கஷ்டம், தேகம் சுகம், பாவமன்னிப்பு, திடீர் பயணம்.

**மிதுனம் :**–பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், அதிகாரப் போட்டி, நண்பர் வருகை, தேகம் சுகம்.

**கடகம்:**– நண்பர் உதவி, காசுக் கஷ்டம், அயலார் தொல்லை. வீதிவிபத்து, அரச அதிகாரி அறிவுறுத்து.

**சிம்மம்:**– பணம் வரும், குடும்பத்தில் குழப்பம், தேகம் பலவீனம், நண்பர் உதவி, திடீர் பயணம்.

**கன்னி :**– குடும்பத்தில் குதூகலம், காசுக்கஷ்டம், தேகம் குத்துழைவு, தேகம் ஏற்ற இறக்கம், வீண் கோபம்.

**துலாம் :**–பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், நண்பர் உதவி, தூரத்திலிருந்து நல்ல சேதி, தேகம் சுகம்.

**விருச்சிகம்:**–குடும்பத்தில் கவலை, தேகம் பலவீனம், பணம் வரும், உடலில் பாதிப்பு, நண்பர் உதவி, திடீர் பயணம்.

**தனுசு:**– பணம் வரும், குடும்பத்தில் உத்தியோகம், தொழில் நன்மை, தேகம் பலவீனம்.

**மகரம:**– குடும்பத்தில் கவலை, காசுக் கஷ்டம், திடீர் சுகம், நண்பர் உதவி, தொழில் முடக்கம்

**கும்பம் :**– பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், நண்பர் விமோசனம், அயல் வீடுபகை, தேகம் பலவீனம்.

**மீனம் :**– குடும்பத்தில் கவலை, காசுக் கஷ்டம், தேகம் பலவீனம், சொல்லிக் கொள்ளாமல் போதல், போகம் பார்த்தல்

# ஒன்றுகூடல்


வேலணை பிரதேச செயலகத்தின் ஊழியர்களினது வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு நாளை நடை பெறவுள்ளது. புத்தாண்டை வரவேற்கும் நிகழ்வுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பிரதேச செயலகத்தில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளவர்களையும், இடமாற் றம் பெற்றுச்சென்றுள்ளவர்களையும், புதிதாக பொறுப்புக்களை ஏற்று பணி புரியவந்துள்ள உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வாகவும் இடம்பெறவுள்ளது. (05)

# நாவலடி மக்களுக்கு சுகாதார விழிப்புணர்வு

அரியாலை நாவலடியில் தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப் பட்ட சுகாதார வழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணிவரை இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறுவர் துஷ்பிரயோகம், இளம்வயதுக்கர்ப்பம், எச்.ஐ.வீ. பாலியல் நோய்கள், குடும்பத் திட்டம், குடும்ப வன்முறை போன்றவற்றுக்கான தடுப்பு முறைகள் பற்றி விளக்கிக் கூறப்பட்டது. நாவலடி மற்றும் பூம்புகார் மக்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெற்றனர் மழைக் கால கிருமிகளை அழிக்கும் பொருட்டு கலந்துகொண்டவர்கள் அனைவருக்கும் குளோறின் லைசோல் ஆகியன வழங்கப்பட்டன.

நல்லூர் பொது சுகாதாரப் பரிசோதகர் க. மதனகுமாரும், அரியாலை குடும்பநல உத்தியோகத்தர் திருமதி ற.ஜெகசோதியும் விழிப்புணர்வுக்கருத்தரங்கில் பங்கு கொண்டு விளக்கவுரைகளை வழங்கினர். (137)



## பரமர் சங்கமம்

விந்திய மலைப் பழங்குடி வழி வந்தவரோ என்னவோ! மலையை அடையாளப் படுத்தி தன்னுடைய நாமகரணத்தைக் கொண்டவர் யாழ். மாநகர சபை கூட்டமைப்பு உறுப்பினராக இருக்கிறார்.

தன்னை அரசியலிலோ அல்லது வேறெந்தத் துறையிலுமோ வளர்த்துக்கொள்ளும் முயற்சியில் பெயரைப் பிரபலப் படுத்திக்கொள்வதற்காக சில மாதங்களுக்கு முன்பாகப் போலி அறிக்கைகளை வெளியிட்டு வந்தார்.

பின்பாக இவரது உண்மையான முகத்தை அறிந்து ஊடகங்கள் இவர் விடுக்கும் அறிக்கைகளைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டன.

இப்பொழுது அவரைப் பற்றிக் கிடைக்கும் விடயங்கள் "புலி வருது புலிவருது" எண்டு போலியாகக் கூப்பாடு போட்டவரது நிலைபோல் உருவாகி இருப்பதாக அறியமுடிகிறது.

அதற்கு இவர் இங்கே திரைமறைவில் செய்து கொண்டிருக்கும் அடாவடி வேலைகள் தானெனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

மேற்படி நபர் வெளிநாடுகளில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றவர்களின் காணி வீடுகளை கள்ள உறுதி முடித்து விற்று பணம் சம்பாதிப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த வகையில் பிறருடைய தென்றில்லாமல் சொந்த உறவுகளின் காணி வீடுகள் சொத்துகளை இவர் தன்னுடையதென கள்ள உறுதிகள் தயார் செய்து வித்துள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

வெளி நாடொன்றில் இருக்கும் இவரது மச்சான் முறை உறவினரான ஒருவர் எமக்கு தொலைத் தொடர்பில் தொடர்பு கொண்டு அழாக் குறையாக இவரது தில்லு முல்லுகளைச் சமீபத்தில் தெரிவித்து இருந்தார்.

அவருக்குச் சொந்தமான காணி வீடொன்றை இவர் கள்ள உறுதி முடித்து வித்துள்ளதாகவும் தெரிவித்து இருந்தார்.

இதன் காரணமாக நீண்ட காலமாக வெளிநாட்டில் தங்கியுள்ள தன்னால் நாட்டுக்கு வந்து போவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.


அப்படி அவர் இங்கே வரும்பட்சத்தில் பெரிய ரகளைகளே வந்து கொலை, கோர்ட்டென்று இழுபறிப்பட நேரலாமெனும் அச்சத்தால் தனது வருகையை பின் போட்டுக் கொண்டிருப்பதாகவும் கவலை அடைந்தார்.

ஆக விந்திய மைந்தன் போலியாக விடுத்த அறிக்கை அவரது அடாவடிச் செய்கைகளால் உண்மை நிலை அடைகையில் புலிவருது புலி வருது எண்டவற்றை நிலைதானோ... எங்களுக்கேன் உந்த வம்புகளை, இல்லையே பாருங்கோ...

# அந்தியேட்டி நாள் நினைவு மரியாதை



மலர்வு : 21.08.1934



உதிர்வு : 13.11.2011

# தோழர் எஸ்.சிவதாசன்

முதுபெரும் இடதுசாரி கட்சி முக்கியஸ்தர், தொழிற்சங்கவாதி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உயர் அரசியல் பீட உறுப்பினர்.

சுமந்த விலங்கை சிதற உடைக்க
எழுந்த நம் கரங்களில் உறுதி தந்து

விடிந்து எங்கள் தேசம் செழிக்க
நடந்த நம் பயணம் எங்கும்
நிமிர்ந்து எமக்கு வழிகாட்டி வந்து...

எரிந்த நம் தேசமும்
சிதைந்த நம் வாழ்வும்
எழுந்து மறுபடியும் நிமிர
உறுதி கொண்டு உழைத்தவர்

சமாதானம்!...சமவுரிமை!
இவரது இலட்சியம் வெல்ல
உறுதியுடன் உழைப்போம்!


அமரர் எஸ்.சிவதாசன் அவர்கள்
அமரத்துவமடைந்தமையை முன்னிட்டு
இன்று (31.12.2011) சனிக்கிழமை
முற்பகல் 11.00 மணிக்கு
மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில்
நினைவஞ்சலி கூட்டம் நடைபெறவுள்ளது.
அன்னாரின் நினைவஞ்சலி கூட்டத்திலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

(C/1182)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணம் மீண்டும் சுவீகரித்தது பல்கலைக்கழகம்

(யாழ்ப்பாணம்)



யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் இரண்டாவது ஆண்டாக நடாத்தி வரும் ஜோர்ஸ் வெப்ஸ்ரர் (யாழ். மத்திய கல்லூரி முன்னாள் அதிபரும், யாழ். நகரில் முதன் முறையாக கிரிக்கெட்டை அறிமுகப் படுத்தியவரும்) கிண்ணத்திற்கான யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வின் முடிவுகள் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தின் 10ஆவது அகவையில் தெரிவு செய்யப்பட்டபோது யாழ். பல்கலைக்கழக அணி 19 போட்டிகளில் பங்குபற்றி 14 போட்டிகளில் வெற்றி பெற்று 59 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றமையால் யாழ். நகரில் சிறந்த அணியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 23 போட்டிகளில் பங்குபற்றி 16 போட்டிகளில் வெற்றிபெற்று 51.5 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், கே.சீ.சீ.சீ. விளையாட்டுக்கழகம் 21 போட்டிகளில் பங்குபற்றி 14 போட்டிகளில் வெற்றி பெற்று 47 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

சிறந்த அணியாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழகத்துக்கு ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணமும், பணப்பரிசிலும், 2012ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ண இறுதிப் போட்டியின் பரிசளிப்பு வைபவத்தில் வழங்கப்படும்.

2010ஆம் ஆண்டு யாழ். பல்கலைக் கழக அணி மேற்படி வெற்றிக் கிண்ணத்தையும், பணப் பரிசினையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்ட பின் 2011ஆம் ஆண்டு யாழ். நகரில் 114 கழகப் போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவே யாழ். நகரின் கிரிக்கெட் வரலாற்றிலே புதிய சாதனையாக அமைந்துள்ளது. மேற்கூறப்பட்ட முதல் மூன்று அணிகளும், யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் இரண்டாவது ஆண்டாக நடத்தவிருக்கும் முக்கோண வெற்றிக் கிண்ண சுற்றுப் போட்டியில் பங்குபற்ற தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இச்சுற்றுப் போட்டி எதிர்வரும் யூலை மாதம் நடைபெறவுள்ளது. முக்கோண வெற்றிக் கிண்ணத்தை 2011ஆம் ஆண்டு ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (07)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(முழங்காவில்)

பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் நேற்று முன்தினம் பூநகரி மகா வித்தியாலய மண்டபத்தில் முன்னாள் தலைவர் இ. ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பூநகரிப் பிரதேச செயலக தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரி எம்.என்.எம். துஜான், பூநகரிப் பிரதேச சபை உறுப்பினர்கள் தி. ஆனந்தவர்ணன், வ. சந்திரலேக இராசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதுவருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றுது. இதில் பே. கௌரீசன் தலைவராகவும், சு. வினோகன் உப தலைவராகவும், க. பிரபாகரன் செயலாளராகவும், செ. கஜேந்திரன் உப செயலாளராகவும் க. ரவிக்குமார் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் கழகத்தின் போசகர்களாக பூநகரி ம. வி. அதிபர் இ. பாலச்சந்திரன், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் பொன். தில்லைநாதன், சுகாதாரப் பகுதி அலுவலர் இ. ராஜ்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (112)

# வாய்ப்பை வீணடித்துவிட்டோம்



(மெல்பேர்ன்)

மெல்பேர்ன் டெஸ்டில் வெற்றி பெற அருமையான வாய்ப்புக் கிடைத்தும் அதை வீணடித்தது ஏமாற்றம் அளிக்கிறது. ஆடுகளம் பந்துவீச்சுக்கு மட்டுமே சாதகமாக இருந்ததாகக் கூற முடியாது என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

இரண்டு இனிங்சிலுமே துடுப்பாட்டத்தில் அதிக தவறுகளைச் செய்தோம். பந்துவீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டார்கள். எனினும், பின் வரிசை வீரர்களை விரைவாக ஆட்டமிழக்கச் செய்யத் தவறியதும் தோல்விக்குக் காரணமாக அமைந்துவிட்டது. இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளோம். ஆஸி. பந்துவீச்சாளர்கள் நல்ல வேகத்துடன் துல்லியமாகப் பந்துவீசி திணறடித்துவிட்டனர். இந்தப் போட்டியில் செய்த தவறுகளைத் திருத்திக் கொண்டு, 2ஆவது டெஸ்டில் சிறப்பாக விளையாடுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வெற்றிக்கு பந்து வீச்சே காரணம்

(மெல்பேர்ன்)

மெல்பேர்னில் இந்திய அணியைத் தோற்கடித்த பெருமை அனைத்தும் எங்களது பந்து வீச்சாளர்களையே சாரும் என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

நெருக்கடிக்கு மத்தியில் களம் இறங்கிய ஹஸ்ஸி சிறப்பாக விளையாடினார். பொண்டிங் இரண்டு இனிங்சிலும் அசத்தினார். எட்கோவனின் பங்களிப்பு முதல் இனிங்சில் அருமையாக இருந்தது. இப்படி பல்வேறு நேர்மறையான விடயங்களையும், நம்பிக்கையையும் இந்த டெஸ்டில் இருந்து பெற்றிருக்கிறோம்.

இந்த வெற்றிக்கான பெருமை

## கிளார்க் பெருமிதம்

அனைத்தும் எங்களது பந்து வீச்சாளர்களையே சாரும். இந்திய அணியில் உலகத்தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

உலகின் சிறந்த துடுப்பாட்ட வரிசையை கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட வீரர்களுக்கு எதிராக நேர்த்தியாக பந்து வீசினர். ஆட்ட திட்டமிடலை களத்தில் சரியாகச் செயற்படுத்தினர். இந்த பாராட்டுக்கு அவர்கள் தகுதியானவர்கள். இதே நிலையைத் தக்கவைத்து தொடர்ந்தும் சிறப்பான ஆட்டத் திறனை அனைவரும் வெளிப்படுத்தவேண்டும் என்றார்.

# நம்பமுடியவில்லை



(மெல்பேர்ன்)

வலுவான இந்தியத் துடுப்பாட்ட வரிசைக்கு எதிராக சிறப்பாகப் பந்துவீசி ஆட்டநாயகன் விருதைப் பெற்றதையும் நம்பவே முடியவில்லை. அணி வெற்றி பெற்றதில் கூடுதல் மகிழ்ச்சி என அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பட்டின்சன் தெரிவித்துள்ளார்.


நான் இந்தியாவுக்கு எதிராக மெல்பேர்ன் டெஸ்டில் விளையாட வேண்டும் என்று ஆவலில் இருந்தேன். அணியில் இடம் பிடித்து இந்தியாவுடன் விளையாடியதன் மூலம் எனது கனவு நிறைவேறியது. டெண்டுல்கர் கிரிக்கெட் விளையாட வந்தபோது நான் பிறக்க கூட இல்லை. அவருக்கு பந்துவீசியது மறக்க முடியாத அனுபவம்.

இந்தியாவின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களை வீழ்த்தியது மகிழ்ச்சியாக இருக்கிறது. துடுப்பாட்டத்தில் சிறந்த இணைப் பாட்டம் கிடைத்துவிட்டால் அவர்களைப் பிரிப்பது கடினம்.

இதற்காக நான் வலை பயிற்சியின் போது விசேட கவனம் செலுத்தி பயிற்சி பெற்றேன். அது எனக்கு கைகொடுத்தது. தொடர்ந்து இதுபோன்ற பல யுக்திகளை வெளிப்படுத்தி பந்து வீச்சில் சாதிக்க முற்படுவேன். இத்தொடரின் மூலம் எனது திறமைகள் மேலும் வெளிப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆஸி ஓப்பனுக்குப் பின் ஓய்வு?

(அபுதாபி)



தோற்பட்டையில் ஏற்பட்டிருக்கும் காயம் காரணமாக அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரிற்குப் பின்னர் தற்காலிகமாக ஓய்வுபெற விருப்புவதாக ஸ்பெயினின் நட்சத்திர ரென்னிஸ் வீரர் ரபேல் நடால் தெரிவித்துள்ளார்.

தோள்பட்டை வலியால் அவதிப்படும் அவர் வருகிற ஜனவரி மாதம் 16ஆம் திகதி தொடங்கும் அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் விளையாட தயாராகி வருகிறார். இந்தப்போட்டி முடிந்ததும் சில நாட்கள் ஓய்வு எடுக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

இது பற்றி நடால் குறிப்பிடுகையில், லண்டன் ரென்னிஸ் போட்டியில் விளையாடிய போது தோள்பட்டையில் பிரச்சினை ஏற்பட்டது. ஏ.டி.பி. ரென்னிசுக்கு முன் 10 நாட்கள் ஓய்வு எடுததேன். தற்போதும் வலி இருக்கிறது. இதனால் என்னால் பயிற்சியில் ஈடுபட முடியவில்லை. அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிசுக்குப் பின் ஓய்வு எடுக்கத் திட்டமிட்டுள்ளேன் எனத் தெரிவித்தார்.

# 2ஆவது போட்டியில் ஹரிஸ்சுக்கு வாய்ப்பு?




(சிட்னி)

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்ரேலியாவின் பந்து வீச்சாளர் றியான் ஹரிஸ் இணைத்துக்கொள்ளப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவரின் உடல் நிலை போட்டியில் விளையாடக்கூடிய வகையில் உள்ளதாக அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை வட்டாரத்திலிருந்து தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவுக்கும் அவுஸ்ரேலியாவுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் மூன்றாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அர்ப்பணிப்புடனான பயிற்சியின் பிரதிபலிப்பே வெற்றியைத் தேடித் தந்தது என்கிறார் திலான்

(டர்பன்)



ஒரே அணியாக அர்ப்பணிப்புடன் மேற்கொண்ட பயிற்சியின் பிரதிபலனே தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெல்லக் காரணம் என்று திலான் சமரவீர தெரிவித்துள்ளார்.

அணியிலுள்ள அனைத்து வீரர்களும் அர்ப்பணிப்புடன் பயிற்சிகளில் ஈடுபட்டனர். அதன் பிரதிபலிப்பாகவே இந்த வெற்றியை நாம் பார்க்கின்றோம். கடந்த சில தொடர்களில் எங்களால் எந்த வெற்றியையும் பதிவாக்க முடியவில்லை. அத்துடன் தென்னாபிரிக்க அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டி படுதோல்வி அடைந்தது மிகுந்த வேதனைக்குரியதொன்று.

இருப்பினும், அத்தோல்வியின் பின்னர் நாங்கள் மீண்டிருப்பதென்பது எமது அணியின் திறமையையே வெளிப்படுத்தும் ஒன்றாகவே பார்க்கின்றோம். அனைத்து வீரர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வெற்றியைப் பதிவாக்கியுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுதந்திரமாக ஆடவிடுங்கள்

(கொல்கத்தா)

பொண்டிங்கும், ஹசியும் சம்பியன் வீரர்கள். இளம் வீரர்களைப் பார்ப்பதைப் போல் அவர்களை பார்க்கக் கூடாது. இருவருக்கும் எந்தவித நெருக்கடியும் கொடுக்காமல் சுதந்திரமாக ஆட விட வேண்டும் என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் சௌரப் கங்குலி தெரிவித்துள்ளார்.

இளம் வீரர்கள் அணிக்குத் தேவை தான். அதற்காக ஒட்டுமொத்த சிரேஷ்ட வீரர்களையும் புறக்கணித்தால் தவறான பாதையில் பயணிக்க வேண்டி இருக்கும். பொண்டிங், ஹசி ஆகியோர் இளம் வீரர்களுக்கு எல்லா வகையிலும் உதவ முடியும். சச்சின், ராவிட் போல் இவர்கள் இளம் வீரர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# கூட்டமைப்பு உறுப்பினர்கள் பகிரங்க விவாதத்திற்கு வரவேண்டும்

## அழைக்கிறார் அமைச்சர் ரிசாட் பதியுதீன்

(கொழும்பு)

தன் மீது போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை பகிரங்க விவாதத்திற்கு வருமாறு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான றிசாட் பதியுதீன் அழைப்பு விடுத்தார்

இந்த விவாதத்திற்கு நான் தயாராக இருப்பதாகவும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சார்பாக யாரும் கலந்துகொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கைத்தொழில் முதலீட்டு அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயேஅவர் இந்த அழைப்பை விடுததார்

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

வடக்கில் தமிழ் மக்களின் ஒரு அங்குல நிலத்தினையும் நான் அபகரிக்கவில்லை. அவ்வாறு நான் அபகரித்துள்ளதாக கூறுபவர்களால் நிரூபிக்க முடியுமா? வடமர்காண மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் நான் தலையீடுவதாக் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

வட மாகாணத்தின் அபிவிருத்திக்கு பொறுப்பாக என்னை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

வடக்கில் சுமார் 100 முஸ்லிம்களுக்கு நான் வேலைவாய்ப்பு வழங்கியதாக போலி பிரசாரமொன்று தற்போது முன்னேடுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைவாய்பினை நான் வழங்கவில்லை. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா மற்றும் மீள்குடியேற்ற அமைச்சராகவிருந்த மில்ரோய் பெர்னாண்டோ ஆகியோர் இணைந்து கடந்த வருடம் இந்த வேலைவாய்ப்புக்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்தனர் இதன் மூலம் புத்தளத்தில் இயங்கிய வட மாகாண முஸ்லிம் மீள்குடியேற்ற செயலணியில் கடமையாற்றி சுமார் 100 பேர் வட மாகாண திணைகளங்களில் நியமிக்கப்பட்டனர்.

வடக்கில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரச்சினையை ஏற்படுத்துவதற்காக சில தீய சக்திகள் செயற்படுகின்றன இச்சக்திகளே தான் தமிழ் மக்களின் காணிகளில் முஸ்லிம்களை மீள்குடியேற்றுவதாக பொய் குற்றச்சாட்டுகளை சுமதது கின்றனர். முஸ்லிம்கள் வாழ்ந்த காணிகளிலேயே அவர்களை குடியேற்றுகின்றோம்.

குறித்த காணிகளில் அவர்கள் வாழ்ந்ததற்கான உறுதிப் பத்திரங்களும் உண்டு. குறித்த பிரதேசங்களில் வாழாத முஸ்லிம்களை நான் ஒரு போதும் மீள்குடியேற்றவில்லை. அதேபோன்று, வட மாகாணத்தில் வாழ்ந்திராத எந்தவொரு இனத்தையும் குடியேற்ற நான் அனுமதிக்கமாட்டேன் என்றார்.

# விசேட முதுமாணிப் பட்டத்திற்கான நிபந்தனைகளை தளர்த்த தீர்மானம்

(கொழும்பு)

கிழக்கு பல்கலைக்கழகத்தின் வெகுசன தொடர்புசாதன மற்றும் முகாமைத்துவ பட்டப் பாடநெறியை தொடரும் மாணவர்களுக்காக விசேட முதுமானி பட்டத்தை தொடருவதற்காக விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளை நீக்க, பல்கலைக்கழக செனட் சபை தீர்மானித்துள்ளது.

அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க மற்றும் உயர் கல்வியமைச்சின் மாணவர் விவகார பணிப்பாளர் நாயகம் கி.பீ. மாவல்லகேயிடம், கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சங்கம் இந்த பிரச்சினையை தீர்க்குமாறு, வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதற்கமைய பல்கலைக்கழக. மானிய ஆணைக்குழு சபையுடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடாத்தியதுடன், உரிய பரிந்துரைகளை, கிழக்கு ப்லகலைக்கழகத்திற்கு அனுப்ப, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

# தொலைபேசியில் ஆபாசப்படம் காட்டியவருக்கு சிறைத்தண்டனை

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் பஸ்ஸில் பயணம் செய்துகொண்டிருந்த பெண்ணொருவருக்கு செல்லிடத் தொலைபேசி மூலம் ஆபாச படம் காட்டிய குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட இளைஞர் ஒருவருக்கு, கொழும்பு கோட்டை நீதவான் ஒன்றரை வருட கடுழிய சிறைத்தண்டனை விதித்தார


மேற்படி சம்பவம் குறித்து பஸ் நடத்துநருக்கும் சாரதிக்கும் அப்பெண் அறிவித்ததயைடுத்து சந்தேக நபர் கொள்ளுபிட்டி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது, குற்றம்சுமத்தப்பட்ட நபரின் முந்தைய குற்றச்செயல்கள் தொடர்பான கைரேகைப் பதிவுகளையும் பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்

குற்றம்சுமத்தப்பட்ட் பத்ம சிறிலால் எனும் நபர் ஏற்கெனவே இதேபோன்ற குறறத்திற்காக நீர்கொழும்பு நீதிமன்றமொன்றினால் ஒரு வருட கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை தெரியவந்தது

அதையடுத்து குற்றவாளியாக காணபட்ட இந்நபருக்கு ஒன்றரை வருட சிறைத் தண்டனையும் 1500 ரூபா அபராதமும் விதித்து நீதவான் லங்கா ஜயரட்ன தீர்ப்பளித்தார்.

# இலங்கையின் அபிவிருத்திக்கு உதவுக; சர்வதேசத்திடம் கோருகிறது சீனா



(கொழும்பு)

இலங்கையில் அபிவிருத்திகளை மேற் கொள்வதற்கு உகந்த சூழலை உருவாகக ஒத்துழைப்பு நல்குமாறு சீனா சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான புனரமைப்புப் பணிகள் மற்றும் பொருளா தார அபிவிருத்தி தொடர்பாக கருத்து தெரிவித்து சீன வெளி யுறவு அமைச்சின் பேச்சாளர் லியூ வெய்மின் சீனாவின் சிங்ஹுவா இணையத்தளத்திற்கு இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை நட்புறவு ரீதியான அண்டை நாடாகும். அங்கு உள நாட்டு நெருக்கடி முடிவிற்கு கொண்டு வந்த நாள் முதல் சீனா இலங்கையுடன் மிக நெருக்கமான உறுவுகளை கொண்டுள்ளது.

இலங்கையின் சமூக நிலைப்பாடுகள், பொருளாதார அபிவிருத்தி, புனரமைப்பு ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள சாதகமான வளர்ச்சியை கண்டு மகிழ்ச்சியடைவதாக அவர் தெரிவித்துளளார்.

# துணை மருத்துவ சேவை பயிலுநர்களுக்கு மாதாந்தம் 12 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

(கொழும்பு)


துணை மருத்துவச் சேவை பாடநெறியை மேற்கொள்ளும் மாணவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தொழில் சங்க நடவடிக்கைகளின் ஊடாக நோயாளர்களை சிரமத்திற்குட்படுத்த வேண்டாமென சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

துணை மருத்துவ சேவை பாடநெறியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மாதாந்தம் 12 ஆயிரத்து 360 ரூபா கொடுப்பனவை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கேற்ப தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர். துணை மருத்துவ சேவை தொழில்சங்கங்களின் கோரிக்கையாக இருந்த 2006, ஆறாம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்தை சீர்திருத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுளளது.

இது தவிர துணை மருத்துவ சேவை கூட்டு முன்னணியின் கோரிக்கை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் இதறகும் துரித தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலைமையில் தொழில் சங்க நடவடிக்கைகளுக்கு செல்ல வேண்டாமென சுகாதார அமைச்சு சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



# அதிவேக நெடுஞ்சாலைக்கு பேருந்துகள் இறக்குமதி

(கொழும்பு)

ஜனவரி மாதம் மூன்றாம் திகதியில் இருந்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பேருந்துகளைச் சேவையில் ஈடுப்படுத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை போக்குவரத்து அதிகார சபை இதனை தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் இதறகு தேவையான பேருந்துகள் வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளதாக அதிகாரா சபையின தலைவர் எம் டி பந்துசேன தெரிவித்துள்ளார்.

# தயாசிறியின் அரசியல் வாழ்க்கையை முடிவுறுத்த சதியென்கிறார் சஜித்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் அரசியல் வாழ்க்கையை முடிவுறுத்த சிலர் முயற்சி செய்து வருவதாக கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் முக்கிய பங்களிப்பை வழங்கி வரும் தயாசிறியின் அரசியல் வாழ்க்கையை இல்லாதொழிக்கும் முயற்சியானது அரசாங்கத்தின் தேவைக்காக நடைபெறுகின்றதா? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தயாசிறிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட உள்ளதாக வெளியான தகவல் குறித்து சஜித் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் போராட்ட குணமுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொற்பளவிலேயே இருக்கின்றனர். அவ்வாறு போராட்டங்களை முன்னெடுக்கக் கூடியவர்களை அழிக்கும் சதித்திட்டமொன்று முன்னெடுக்கப்படுகின்றது.

இந்நிலையில், சுஜீவ சேனசிங்க, புத்திக்க பத்திரண ஆகியோரின் வரிசையில் தற்போது தயாசிறி ஜயசேகரவையும் இணைக்க முயற்சி செய்யப்படுகின்றது.

இந்த நிலையில் தயாசிறி ஜயசேகர கட்சியில் உயர்பதவி வகிக்க வேண்டிய ஓர் உறுப்பினர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# போராட்டத்திற்கு தயாராகிறது அஞ்சல் தொழிற்சங்க ஒன்றியம்

(கொழும்பு)

அஞ்சல் மா அதிபர் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு ஜனவரி மாதம் முதல் வாரத்தினுள் தீர்வு பெற்றுத்தராவிடின் மற்றுமொரு தொழிற் சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக அஞ்சல் தொழிற்சங்க ஒன்றியம் அறிவித்துள்ளது.

அதன் ஊடக பேச்சாளர் கே எம் சிந்தக பண்டார தெரிவிக்கையில், கடந்த தினத்தில் மேற் கொள்ளப்பட்ட தொழிற்சங்க போராட்டத்தின் போது, இந்த பிரச்சினைக்கு இரண்டு வாரங்களில் தீர்வு பெற்றுக்கொடுக்கப் படும் என்று அமைச்சர் ஜீவன் குமாரதுங்க உறுதியளித்திருந்தார்.

எனினும் இவ்வாறு குறிப்பிட்ட காலம் கடந்து மேலும் ஒரு வாரம் கடந்துள்ள போதிலும் எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என்றார்.

இது தொடர்பில் அஞ்சல் சேவைகள் அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாந்து கருத்து வெளியீடுகையில்,

குறித்த பிரச்சினையை தீர்ப்பது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.




எனினும், தொழிற்சங்க போராட்டங்கள் எவையும் முன்னெடுக்கப்படுமாயின் அதற்கு முகங்கொடுக்க தமது அமைச்சு தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.



ஆனையிறவு உப்பளப் பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அங்கு கட்டடங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தார். உப்பளத்திற்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் விரைவாக பூர்த்தி செய்வது தொடர்பில் துறை சார்ந்தோரிடம் கலந்துரையாடிய அமைச்சர் வெகுவிரைவில் உப்பள செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

# தாவரவியல் பூங்காக்கள் மூலம் 311 மில்லியன் ரூபா வருமானம்

(கொழும்பு)

தேசிய தாவரவியல் பூங்காக்களின் மூலம் இவ்வருடத்தில் 311 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டப்பட்டுள்ளதென தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையால் இவ்வருடத்தில் தேசிய தாவரவியல் பூங்காக்களில் இலாபம் பெறப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் நிறை வேற்றுப் பணிப்பாளர் கலாநிதி சிரில் விஜேசுந்தர தெரிவித்துள்ளார்.

பேராதனை ஹக்கல மற்றும் கம்பஹா ஆகிய தேசிய தாவரவியல் பூங்காக்களின் ஊடாக இந்த இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டாகும்போது நாட்டில் மேலும் 10 புதிய தாவரவியல் பூங்காக்களை அமைக்க எதிர்பார்க்கப்பட்டது. மிரிஜ்ஜவில மற்றும் அவிசாவளை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் தேசிய தாவரவியல் பூங்காக்களின் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளனர்.

## புதிய மின் இணைப்பு பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கும் மக்கள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் புதிதாக மின் இணைப்புப் பெறுவதில் சிரமத்தை எதிர்கொள்வதாக மின் இணைப்புக்கு விண்ணப்பித்தோர் விசனம் தெரிவிக்கின்றனர். புதிதாக வீடுகள் கட்டி மின் இணைப்புப் பெறுபவர்கள் மின்சார சபையால் இணைப்புப் பெறுவதற்கு விண்ணப்பித்து ஒரு மாதம் கடந்த நிலையிலும் மின் இணைப்புக்கான கட்டண விபரங்களை விண்ணப்பதாரிகளிடம் தெரிவிப்பதில்லை எனவும் மின் இணைப்புப் பெறுவதற்கு கட்டணம் செலுத்தியும் மின் இணைப்பை வழங்குவதற்கு தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்

வவுனியா சாஸ்திரிகூழாங்குளம், கட்டயடம்பன் கிராமத்திற்கும் ஒரு வருடத்திற்கு மேலாக மின் இணைப்பு வழங்கப்படவில்லை. வடக்கின் வசந்தத்தில் மின் இணைப்பு வழங்குவதாக கூறி கடந்த சித்திரை மாதம் வீதியோரத்தில் மின் கம்பங்கள் நடப்பட்ட போதிலும் இதுவரை கம்பிகள் இணைக்கப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் வவுனியா மாவட்ட பிரதான மின் பொறியியலாளர் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்

## பௌத்த சாசனத்திற்கு தொண்டாற்றும் வறிய குடும்பங்களுக்கு நிவாரணம்

(கொழும்பு)

பௌத்த சாசனத்திற்கு தொண்டு புரியும் வறிய பிரதே சங்களை சேர்ந்த குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் நிவாரணங்கள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் மிரிச வெட்டிய விகாரதிபதி ஈதல வெட்டுனுவெவே ஞானதிலக தேரரிடம் ஆசி பெற்ற போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, விகாரைகளுக்கும் சென்று பீடாதிபதிகளிடம் ஜனாதிபதி ஆசி பெற்று வருகின்றார்.

வரலாற்று புகழ் மிக்க ஜய சிறி மகா விகாரைக்கும் ஜனாதிபதி விஜயம் செய்துள்ளார்.

நேற்று முன்தினம் மல்வத்து மஹாநாயக்கரிடம் ஆசி பெற்று கொண்டார்.

கெட்டம்பே ராஜோபவனாராம விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

**ஜனாதிபதி அறிவிப்பு**

## முல்லை மாவட்டத்திலும் தொழிற் திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

கடந்தகால போர்ச்சூழல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த தொழிற் திணைக்களம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் தனது பணியை ஆரம்பிக்கவுள்ளதாக வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் ஊழியர் சேமலாப நிதி தொடர்பான தமது தேவைகளை ஊழியர் சேமலாப பணியாளர்கள் நிறைவேற்றிக்கொள்ளமுடியும். அத்துடன் ஊழியர் சேமலாப நிதி சம்பந்தப்பட்ட படிவங்களைப் பெற்று முல்லைத்தீவில் அமைக்கப்படவுள்ள அலுவலகத்தில் சிரமமின்றி பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கடந்தகாலங்களில் இவ்வாறான நோக்கங்களுக்கு குறித்த பகுதி மக்கள் வவுனியா தொழிற்திணைக்கள அலுவலகத்திற்கு சென்றே பெற்றுக்கொண்டனர்.

எதிர்வரும் காலங்களில் வவுனியா தொழிற் திணைக்கள அலுவலகத்திற்கு செல்ல வேண்டிய தேவை இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

(எஸ்)

## எதிர்கால வேலை வாய்ப்பிற்கு தயார் செய்யும் தொழிற்பயிற்சி

(கொழும்பு)

பாடசாலையை விட்டு விலகிய இளைஞர் யுவதிகளை எதிர்கால வேலைவாய்ப்புக்கு தயார் செய்வதற்கான தொழிற்பயிற்சிகள் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முறைசாரா கல்விப் பிரிவில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் தகுதியான பயிலுனர்கள் மற்றும் போதனாசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பயிலுனர்கள் பாடசாலையை விட்டு விலகியவர்களாகவும் 16 வயது முதல் 29 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதுடன் ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்பயிற்சி நெறிகளில் தொழிலகத் தையல், வீட்டு மின் இணைப்பு, கேக் ஐசிங், மணப்பெண் அலங்காரம், வெல்டிங் வாயு சீராக்கி மற்றும் குளிரூட்டி திருத்துதல், திரையச்சுப்பதிப்பு, தோற் பொருள் உற்பத்தி, அலுமினியம் பொருத்துதல், வாகன மின்னிணைப்பு, உணவு பதனிடலும் பாதுகாப்பும் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன

இப்பயிற்சி நெறியை நிறைவு செய்பவர்களுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படவுள்ளதுடன் பயிற்சிகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படவுள்ளது என வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்

எதிர்வரும் 18.01.2012ஆம் திகதி முடிவு திகதியாக அறிவிக்கப்பட்டுள்ள இப்பயிற்சி நெறிகள் தொடர்பான மேலதிக விபரங்களை வவுனியா தெற்கு கல்வி வலய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





அண்மையில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் மறையாசிரியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளிவிழா நிகழ்வில் மாணவர்கள் நத்தார் கீதம் இசைப்பதையும், இதில் கலந்து கொண்ட பங்குத்தந்தை அருட்திரு நேசராஜா மற்றும் சமூக சேவகர் அண்ணாவியார் கிறிஸ்தோப்பர் மற்றும் பொதுமக்களையும் காணலாம். (21)

# யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2012 கற்கை நெறிக்குத் தெரிவானோர்

**நேற்றைய தொடர்ச்சி**

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரிக்கு 2012ஆம் கல்வி ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கான பதிவுகள் எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும், அன்றைய தினமே கற்றல் செயற்பாடு கள் ஆரம்பமாகும் என பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் விபரம் வருமாறு:

**ஆரம்பக் கல்வி**

பாலேந்திரன் பகீரதி (சாவகச்சேரி), சிவகௌரி சிவகுமார் (பருத்தித்துறை), மயூரா நாகேஸ்வரன் (பருத்தித்துறை), தனரஞ்சினி கணேசபிள்ளை (காரைநகர்), சர்மிளா இராசலிங்கம் (யாழ்ப்பாணம்), தர்மராசா சிவபரன் (சாவகச்சேரி), சோபனா மகேந்திரன் (சுழிபுரம்), நிலன்ரி குலேந்திரன் (பருத்தித்துறை), வல்லிபுரம் அம்பிகை சீலன் (கரவெட்டி), ராதிகா பாலகிருஷ்ணன் (கரவெட்டி), மோகன ராஜா நிரோஜன் (உடுப்பிட்டி), கஜழினி மகேஸ்வரன் (வட்டுக்கோட்டை), பானு ரேகா கிருஷ்ணபிள்ளை (கரவெட்டி), வீரசிங்கம் மயூரன் (வரணி), கஜேந்தினி ஸ்ரீஸ்கந்தராஜன் (யாழ்ப்பாணம்), கனகரட்ணம் குகதாஸன் (ஏழாலை), ரமேஷினி ராஜவரோதயம் (சுன்னாகம்), சிவப்பிரகாசம் தூவாரகன் (கரவெட்டி), பாலசுப்பிரமணியம் பிரியந் (வல்வெட்டித்துறை), கந்தையா கீதாஞ்சலி (நீர்வேலி), ரட்ணசிங்கம் வினோஜா (கரவெட்டி), தேவகி சிவநேசன் (யாழ்ப்பாணம்), டிறோலினி செல்வராசா (சுழிபுரம்), உசாலினி செல்லததுறை (மாதகல்), துசித்தா கந்தசாமி (நீர்வேலி), கந்தசாமி கௌசிகா (சாவகச்சேரி), சிவத்தம்பி கஜர்ஸனா (அச்சுவேலி),

**நடனம்**

துஷ்யந்தி ரவிக்குமார் (யாழ்ப்பாணம்), தர்சிகா ரமணிதாஸ் (யாழ்ப்பாணம்), செல்லாத்துரை றித்தியா (அம்பாறை), யோகேஸ்வரன் வானதி (அம்பாறை), தவரட்ணம் கௌரிகா (முல்லைத்தீவு), புவிதா தேவராஜன் (யாழ்ப்பாண்), சுஜனா நித்தியானந்தம் (யாழ்ப்பாணம்), கஜத்திரி சிவலிங்கம் (யாழ்ப்பாணம்), ஜெயபாலன் சோபிகா (கிளிநொச்சி), கஜேந்தினி பாலசுப்பிரமணி யம் (வவுனியா), பேரின்மமூர்த்தி சுலோஜினி (அம்பாறை), விநாயக மூர்த்தி தயானந்தி (மட்டக்களப்பு), லோஜினி நித்தியானந்தரட்ணசர்மா (திருகோணமலை),

**கர்நாடக சங்கீதம்**

சொக்கலிங்கம் தமிழினி (வவு னியா), லதீபா றுத்திரகுமார் (யாழ்ப் பாணம்), வைரவரன் பிரதீபன் (யாழ்ப் பாணம்), பிரான்சிஸ் மேரி ஜக்குலின் (யாழ்ப்பாணம்), அர்த்திகா அமிர்தலிங் கம் (யாழ்ப்பாணம்), நிரஞ்சலா நாக ராசா (யாழ்ப்பாணம்), தர்சிகா பஞ்சாப கேசன் (திருகோணமலை), ராஜ் சண்முகராசா (யாழ்ப்பாணம்), நீனா கொன்சலா சேவியர் அருமைநாயகம் (யாழ்ப்பாணம்), தற்சன மூர்த்தி சுகிர்தா (அம்பாறை), அன்ரனி ரோசாணிரூபன் (வவுனியா), யாழினி சுப்பிரமணியம் (கிளிநொச்சி), பிலேமினா சோதீஸ் வரன் (மட்டக்களப்பு), ரூபிகா கனகரட்ணம் (புத்தாளம்).

**நாடகமும் அரங்கியலும்**

பஞ்சலிங்கம் பிராதபன் (யாழ்ப்பாணம்), ரோணுகா சாளினி லோரான்ஸ் (யாழ்ப்பாணம்), டிரோலினி செல்வராசா (யாழ்ப்பாணம்), வேணுஜா யோகராசா (மட்டக்களப்பு), விஜயச்சந்திரன் சுமரங்கா (அம்பாறை), தெய்வேந்திராசா தினேஸ் (யாழ்ப்பாணம்), சுபாஜினி தில்லையம்பலம் (யாழ்ப்பாணம்), நாகலிங்கம் கோபிதா (யாழ்ப்பாணம்), கிருத்திகா ரவீந்திரன் (மட்டக்களப்பு), சொபஸ்தியன் சிறோமி (அம்பாறை), இராசநாயகம் ரதன் (திருகோணமலை), நிதர்சன் சுந்தர்ராசா (கிளிநொச்சி), விஸ்ணுராஜ் விஜயகுமார் (வவுனியா), இராமசந்திரன் லோகிலவாணி (நுவரேலியா)



## உழைப்பு

அமெரிக்க கோடீஸ்வரர் ரொக்பெல்லர் ஒரு முறை தனது 70 ஆவது வயதில் விமானத்தில் பயணம் செய்துகொண்டிருந்தார்.

அவர் அருகில் இருந்த நபர் அடையாளம் கண்டு விட்டுச் சொன்னார்.

"ஐயா... நீங்களோ அமெரிக்க கோடீஸ்வரர். வயது முதிர்ந்துவிட்டது. நீங்கள் ஏன் இந்த வயதிலும் உழைக்க வேண்டும். ஓய்வு எடுக்க வேண்டியது தானே?"

"இந்த விமானம் இப்போது வானத்தில் பறந்து கொண்டிருக்கிறது. மேலெழும்பி வானத்தில் தானே பறக்கிறது என்று என்ஜினை நிறுத்திவிட்டால் என்ன நடக்கும்?" என்று திருப்பிக் கேட்டார் ரொக்பெல்லர்.

"அது எப்படி... தரையில் வீழ்ந்து விமானம் நொறுங்கி விடுமே!"

"மிகவும் சரி. நானும் எனது உழைப்பை நிறுத்தி விடடால் என் உடலும், மனமும் கெட்டு சீக்கிரமே இறந்து விடுவேன். நான் இறக்கும் வரையில் உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும்" என்றாராம் ரொக் பெல்லர்.

## வன்முறை எரிபொருள்

விமல் குழந்தைவேலுவின் கசகரணம் 84 ஆம் ஆண்டு காலகட்டத்தை சித்திரிக்கிறது.

தமிழ் -முஸ்லீம் இனத்தகராறில் எரிக்கப்பட்ட அக்கரைப்பற்று சந்தையில் வியாபாரம் செய்யும் நான்கு பேர்களை பாத்திரமாக்கி கதை சொல்லப் படுகிறது. இந்தக் கதைமாந்தர் சாதாரண மனிதர்கள். பெரிய இலட்சியங்கள் அற்றவர்கள். தங்கள் குடும்பம், நாளைய வாழ்வு. அந்த வாழ்வில் சினிமா, இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பு உட்பட சின்னச் சின்ன கனவுகளை நிரப்பி தையல் பெட்டியுடன் விளையாடும் சிறுவன் செந்தில் போன்று தங்கள் வாழ்க்கைப் போராட்டங்களில் மூழ்கி இருக்கிறார்கள்.


தமிழர்கள், முஸ்லீம்கள் என மத வேறுபாடுகள் இருந்தாலும் அடிப்படையில் ஒன்றாக ஒருவரோடு ஒருவராக சேர்ந்து வாழ்ந்த சமூகங்களை அரசியல், விரோதிகளாக்குகிறது. ஒரு தாயிடம் உணவு அருந்தியவர்கள் ஒருவரை ஒ்ருவர் கொலை செய்ய இந்த அரசியல் தூண்டுகிறது. கசகரணத்தின் முதல்பாகம் சகோதர வாழ்வை எடுத்துச் சொல்கிறது.

இந்தச் சகோதர வாழ்வு அமைதியானதோ சாத்வீக மானதோ அல்ல. ஆங்காங்கு வன்முறைகள் தலைகாட்டுகின்றன. ஆனால் அவை தனிமனித விழுமியம் சம்பந்தப் பட்டவை.

சமூகமயப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டது அல்ல. மனைவி தனக்குத் தெரியாமல் சினிமாப் படம் பார்த்து விட்டாள் என்பதற்காக சந்தையில் வைத்து அடிப்பவர், குறப்பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குபவர், தியேட்டரில் படம் நின்றதற்காக அசிங்கமான வார்த்தையில் முதலாளியை திட்டுவோரை தடிகொண்டு அடிக்கும் தியேட்டர் முதலாளி என நடமாடும் சமூகத்தில் வன் முறைகள் பல வடிவங்களில் இருந்தது.

ஆனால் இந்த அரசியல் போராட்டம், தனிமனித வன முறைகளுக்கு அரசியல் இனவாத சாயம்பூசி, அதற்கு சமூக அங்கீகாரம் கொடுத்து நிறுவன மயமாக்குகிறது. சமூகத்தில் உள்ள சண்டியர்கள், பெண்களை துன்புறுத்தும் வன்முறையாளர்கள், இயக்கங்களில் சேர்ந்து வன்முறைக்கு அங்கீகாரம் பெறுகிறார்கள். நிறுவன மயப் படுத்தப்பட்ட வன்முறையில் சம்பந்தப்படாத அப்பாவிகளையும் பெண்களையும் குழந்தைகளையும் விட்டு வைக்காமல் காட்டுத் தீயாக அழிக்கிறது. இந்த வன் முறை எரிபொருளாக, அரசின் வன்முறைக்கும் மற்றும் ஒடுக்கு முறைக்கும் அங்கீகாரம் அளிக்கிறது. பலமானதும் இறுக்கமான கட்டமைப்புமுள்ள அரச இயந்திரம் வன்செயலில் திறமையாக ஈடுபடுகிறது.

இயக்க வன்முறையாளர் உயிர்களை அழிப்பதில் மட்டுமல்லாமல் உடைமைகளை தோட்டங்களை அழிக்



கிறார்கள். இந்த வன்முறையை எதிர்கொள்ள அரசாங்கப் படையினர் மேலதிகமாக ஏவப்படுகிறர்கள்.

இதில் ஒரு விசித்திரமான விடயம் என்னவென்றால், வன்முறையாளரின் அழிவு மன நிலையானது இலங்கையில நடந்த வன்முறைச் சம்பவங்களில் உறைந்திருக்கிறது. அங்கு எப்பொழுதும் சந்தைகள் எரிந்திருக்கின்றன. யாழ்ப்பாணம் பெரியகடைச்சந்தை 81 இல் எரிபட்டது. வவுனியா சந்தையை விமானப்படையினர் எரித்த போது நான் நேரில் பார்த்தேன். அக்கரைப்பற்று சந்தை எரிந்த சம்பவம் இந்த நாவலில் சொல்லப்படுகிறது.

சமீபத்தில் கிளிநொச்சி சென்றபோது நான் பார்த்த விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட தண்ணீரத் தாங்கி வன்முறை மனங்களின் வக்கிரத்திற்கு சாட்சியாக இருக்கிறது. மனிதர்கள் மத்தியில் தகராறு என்றால் தண்ணீர்தாங்கியும் சந்தையும் உங்களுக்கு என்ன செய்தது?

இந்த நாவலின் முக்கிய வெற்றிக்குக் காரணம் எந்த ஒரு பகுதியினரையும் எதிரியாக்காமல் அதே போன்று ஹீரோக்களை உருவாக்காமல் மனித இழப்புகளின் வலியை வெளிக்கொணர்ந்ததுதான். போர்க்கால எழுத்துகள் என்று கூறிக்கொண்டு எழுத்துகளில் இரத்தத்தையும் தசையையும் தடவி எழுதாமல் ஒரு பகுதியினரை அசுரர்களாக்காமல் உள்ளத்தின் வலியையும் தனி மனித ஆற்றாமையையும் எழுத்தில் கொண்டு வந்ததாகும். கிழக்கிலங்கையின் ஒரு முக்கிய கால கட்டத்தையும் தமிழ் - இஸ்லாமிய உறவுகளின் சிதைவை புரிந்து கொள்ளவும் இந்த நாவல் உதவும். சமீப காலத்தில் வந்த இலங்கைப் படைப்புகளில் முக்கியமானது என நினைக்கிறேன்

*- கசகரணம் விமர்சனத்தில் நடேசன்*


## சிவன் பேரனின் கொழுந்து வெத்தல



ஏழிசை வேந்தர் எம்.கே.தியாகராஜ பாகவதரின் கணீர்க் குரலில் தரணியெங்கும் ஒலித்த "மன்மத லீலையை வென்றார் உண்டோ..." பாடலை தலைமுறை தாண்டியும் எவராலும் மறக்க முடியாது."ஹரிதாஸ்" படத்தில் இடம்பெற்ற இந்த சாகா வரம் பெற்ற பாடலை எழுதியவர் மறைந்த கவிஞர் பாபநாசம் சிவன். அவருடைய பேரனும் கர்னாடக சங்கீதத்தில் புலமை பெற்றவருமான அசோக் ரமணி, பாடல்களைப் புனைவதிலும் அவற்றை தன்னுடைய தென்றலிசைக் குரலால் பாடுவதிலும் வல்லவர்.

உலகம் முழுவதும் பல நாடுகளில் கர்னாடக இசைக் கச்சேரிகளை நடத்தி வரும் இவரை சும்மா விடுமா சினிமாவுலகம்? தான் தயாரித்து இயக்கி வரும் "ஒரு சொல்" என்ற படத்துக்காக அசோக் ரமணியை வற்புறுத்தி பாட வைத்திருக்கிறார் வி.வெங்கட்ராமன். சினேகன் பாடலை எழுத சாமுவேல் என்ற புதியவர் இசையில் "வெத்தலன்னா... வெத்தல, நான் கொழுந்து வெத்தல..." என்ற பாடலை அனுராதா ஸ்ரீராமுடன் இணைந்து உச்ச ஸ்தாயியில் பாடியிருக்கிறார் அசோக் ரமணி. அடுத்த ஆண்டு ஒலிக்கப்போகும் சூப்பர் ஹிட் பாடல்களில் இந்தப் பாடலுக்குத் தான் முதல் இடம் என அடித்துச் சொல்லுகிறது "ஒரு சொல்" படக் குழு.

## ஆகாயத்தில் ஒரு நடை!



சீனாவில் உள்ள ஹுனான் மாகாணத்தில், இயற்கை வளத்துக்கு பஞ்சம் இல்லை. ஓங்கி உயர்ந்த மலைத் தொடர்களும், அடர்ந்த வனப் பகுதியும் இங்கு நிறைந்துள்ளன. இங்குள்ள தியானென்மென் மலைத் தொடர், உலகின் முக்கியமான சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. இந்த மலையையும், வனப் பகுதியையும், மிக அருகில் சென்று ரசிப்பதற்கு, ஒரு, "த்ரில்லிங்"கான அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது, சீன அரசு.

கடல் மட்டத்தில் இருந்து, 4,700 அடி உயரத்தில், மலையை ஒட்டி, அழகான, அதே நேரத்தில் பிரமாண்டமான கண்ணாடிப் பாலத்தை அமைத்துள்ளனர். இருநூறு அடி நீளத்துக்கு இந்த பாலம் அமைக்கப் பட்டுள்ளது. இதில் நடந்து செல்வோரின் கால்களுக்கும், கீழே உள்ள, 4,700 அடி உயரத்துக்கும் இடையில் இருப்பது, வெறும் 2.5 அங்குலம் தடிப்பான கண்ணாடி மட்டுமே. இதன் மேலிருந்து பார்த்தால், தியானென்மென் மலைத்தொடரும், அடர்ந்த வனப் பகுதியும் துல்லியமாக தெரியும்.

நம் கால்களுக்கு கீழே இயற்கை அதிசயம் குவிந்து கிடப்பதை, ஒருவித பீதி கலந்த மகிழ்ச்சியுடன் ரசித்துக் கொண்டே செல்லலாம். சுற்றுலா பயணிகள் அதிக அளவில் இங்கு வந்தாலும், பயம் காரணமாக, பாதியிலேயே தலைதெறிக்க ஓடிச் சென்று விடுவதாக, அதிகாரிகள் கூறுகின்றனர். பின்னே, ஆகாயத்தில் நடப்பது என்றால் சும்மாவா?



## பாலைவன சொர்க்கம்


இயற்கை அதிசயங்கள் கொஞ்சி விளையாடும் இடங்களை பூலோக சொர்க்கம் என கூறுவது உண்டு. ஆனால், பாலைவன சொர்க்கம் பற்றி கேள்விப்பட்டது உண்டா? ஐக்கிய அரபு எமிரேட்டில் இந்த பாலைவன சொர்க்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திரும்பும் பக்கமெல்லாம், பல வண்ணங்களில் பூத்துக் குலுங்கும் மலர்கள், பசுமை கொஞ்சும் புல்வெளி என, கண்ணுக்கு குளிர்ச்சியாக உருவாக்கப்பட்டுள்ளது, இந்த சொர்க்கம். உயரமான இடங்களில் தொங்க விடப்பட்டுள்ள, 2,965 கூடைகளில், கண்ணை கவரும் மலர்கள் தொங்குகின்றன. இதைப் பார்ப்பதற்கு தொங்கு தோட்டம் போலவே உள்ளது.



மலர்களாலேயே பிரமிடுகள், ஒட்டகம், யானை, ஈபிள் டவர் ஆகியவையும் உருவாக்கப் பட்டுள்ளன. இரவு நேரங்களில் இங்கு பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் ஒளிரும் போது, சொர்க்கமே கீழிறங்கி வந்து விட்டது போல் இருப்பதாக, பார்வையாளர்கள் கூறுகின்றனர். 21 ஆயிரம் சதுர அடியில் இந்த தோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இது இடம் பெற்றுள்ளது.

# என்ன எழுதிக் கிழித்து விட்டேன்?



பள்ளிக்கூடத்தில் நான் திக்குவாய். அதனால் என்னை கேள்வியே கேட்கமாட்டார்கள். பையன்கள் என்னை தூரத்தில் ஒதுக்கி வைத்திருந்தார்கள். கடைசி பெஞ்ச் பையன். குறைந்த மதிப்பெண் பெறும் மாணவனும் நான் தான். படிக்கவே மாட்டேன். எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும் போது, "நீ பாஸ் பணணுறது பெரிய ஆச்சர்யம்" என்று வாத்தியார் சொன்னார். இதனால், ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மை பின்னாளில நான் ஒரு எழுத்தாளனாக ஆனதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். மனோதத்துவ நிபுணர்களைக் கேட்டால் இன்னும் சரியாகச் சொல்லக்கூடும்.

செய்தித்தாள்களில் படித்தவை, வெளியே பார்த்தவை போன்றவற்றிலிருந்துதான் நான் நிறைய எழுதியிருக்கிறேன். குடும்பத்தில் இருந்து எப்போதும் எதையும் எழுத்துக்கு களனாக தேர்வு செய்ததில்லை. ஒரு பொறி தான். படிதத, கேள்விப்பட்ட, பார்த்த, பாதித்த ஏதாவது ஒன்று எழுதத் தூண்டும். முன்பெல்லாம் உட்கார்ந்து ஒரே மூச்சில் மூன்று மணி நேரத்தில் எழுதிவிடுவேன். இரவு அல்லது அதிகாலையில் எழுதுவேன். ஆரம்பத்தல எழுதுவதில் ஒரு சந்தோஷம் இருநதது. வீட்டில் யாராவது இருந்தாலும் இல்லாவிட்டாலும் நான் பாட்டுக்கு உட்கார்ந்து எழுதிக்கொண்டிருப்பேன். திருப்பி எழுதுவது கிடையாது.

எந்தக் காரணமும் இல்லாமல் எவ்வளவோ விஷயங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அதுபோல்தான இங்கே மெட்ராஸில் இருந்து கொண்டிருக்கிறேன. இந்த வாழ்க்கைக்கு லாயக்கில்லாத ஆள் நான். எனக்கு முடியவில்லை. இப்போதும் தேவையில்லாமல்தான் இங்கு இருந்து கொண்டிருக்கிறேன். எங்கே போவது என்றும் தெரியவில்லை. எங்காவது சாப்பாடு கிடைக்கும் இடமாக ரிஷிகேஷ் போல் போய்விடலாம் என்றிருக்கிறேன். ஆனால், குழந்தைகள் இருக்கிறார்கள். எனவே, அது அவ்வளவு சுலபமாக முடியாது. குழந்தைகள் கல்யாணமாகி செட்டிலாகிவிட்டார்கள் என்றால் புறப்பட்டு விடலாம். ஆனால், எங்காவது போகலாம் என்றால் அதற்கான பணமும் என்னிடம் கிடையாது. அதற்கும் குழந்தைகளை சார்ந்துதானே இருக்க வேண்டியதிருக்கிறது!

கண்ணதாசன், கணையாழி, புதுவைக் குரல், துக்ளக், சுபமங்களா, அன்னை நாடு போன்ற பத்திரிகைகளில் இருந்தேன். பதின்மூன்று வருடங்கள் துக்ளக்கில் இருந்தேன். என்னைச் சரியாகப் புரிந்துகொண்டு இவனை நல்ல வழியில் திருப்பி விடவேண்டும் என்று சோ மிகவும் முயற்சித்தார். இவன் தப்பாகப் போய்விடுவான் என்று அவருக்குப் பட்டிருக்கவேண்டும். துக்ளக்கில தான் ஒரு பத்திரிகையாளன் பணி என்ன என்பதை தெரிந்துகொண்டேன். எனது கவனம் இலக்கியத்தை தாண்டி அரசியல், சட்டம், சமூகம், சினிமா, நாட்டு நிர்வாகம் போன்ற பல துறைகளுக்கு விரிந்தது. ஆனாலும், என்னால் அங்கு இருக்கமுடியாமல் ஆகிவிட்டது. எழுதவேண்டும் என்று அவசியமில்லை உங்களால் என்ன முடிகிறதோ அதைச் செய்துகொண்டு இருங்கள் என்று கூட சோ சொல்லிப் பார்த்தார். எனக்கு ஒரு விதமான மனச் சோர்வு வந்துவிட்டது. இலங்கையுடனும் விடுதலைப்புலிகளுடனும் தேவையில்லாமல் என்னையும் சேர்த்து யோசித்ததில், மனம் பயம்கொள்ளத் தொடங்கிவிட்டது. பொலிஸ் வந்து விடும், ஆட்கள் கொலை செய்ய வருகிறார்கள் என்றெல்லாம் தோன்றியது. பிரச்சினை என்று தோன்றி விடடதால் துக்ளக்கிலிருந்து வந்துவிட்டேன்.

மாலன் இந்தியா டுடேயில் இருந்த போது என்னைக் கூப்பிட்டார். நான் சிரமப்படுகிறேன் என்று தெரிந்து எனக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று அவர் நினைத்தார். ஆனால், அவ்வளவு பெரிய பத்திரிகைக்கு நாம் தகுதியானவன்தானா என்று எனக்கு பயம் வந்துவிட்டது. அது போன்ற ஒரு பத்திரிகையில் நாம் என்ன செய்ய முடியும்? எனவே, பிரபுசாவ்லாவைச் சந்திப்பதற்கு மாலன் ஏற்பாடு செய்திருந்த அன்று நான் போகவில்லை. என்னைத் தெரியும் என்பதால் மாலனும் அதனைப் பெரியதாக எடுத்துக்கொள்ளவில்லை. "பரவாயில்லை ராமச்சந்திரன்" என்று சொன்னார்.

ஆனால், இப்படிப் பயந்துகொண்டு எத்தனை நாளைக்கு இருந்துவிடமுடியும். குடும்பம் இருக்கிறது, குழந்தைகள் இருக்கிறார்கள். எனவே, கோமல் சுவாமிநாதனிடம் போய் வேலை கேட்டேன். சுபமங்களா ஒரு மாதப் பத்திரிகை. இரண்டு ஆட்களுக்கு மேல் அங்கு வேலையே கிடையாது. ஆனால், நான் சிரமப்படுகிறேன் என்பதால் அவர் சேர்த்துக் கொண்டார். எல்லா இடங்களிலும் போல் அங்கும் ஒரு பிடிப்பு இல்லாமல்தான் இருந்தேன்.

முழுநேர எழுத்தாளன் என்று சொல்லிக் கொள்வதற்குப் பொருத்தமானவன் இல்லை நான். சாதாரண ஆளா இருந்திருக்க வேண்டியவன். தற்செயலாக இதில வந்து மாட்டிக்கொண்டு விட்டேன். எதனாலோ வேறு வழியில்லாமல் தொடங்கி விட்டேன். அப்புறம் தொடங்கி விட்டதாலேயே இவ்வளவு தூரம் நகர்நது வந்து விட்டேன். எழுத்து எனக்கு எப் போதும் தாகம் இல்லை. ஏதோ தோணிச்சி எழுதினேன் ஆரம்பததில், எழுதத் தொடங்கய காலத்தில், ஒரு சந்தோஷம் இருநதது. ஒரு உத்வேகம் இருந்தது. ஆனால், தொடங்கிய ஐந்தாவது, ஆறாவது வருடத்திலேயே அது வடிந்துவிட்டது.

அங்கீகாரத்தைப் பொறுத்தவரைக்கும் ஆரம்பத்திலேயே அது எனக்குக் கிடைத்திருக்க வேண்டியதைவிட அதிகமாகக் கொடுக்கப்பட்டுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். நான் மிகவும் குறைவாக எழுதியிருந்த போதே சுந்தர ராமசாமி அளவுக்கு, அசோகமித்திரன் அளவுக்கு என் பெயரும பேசப்பட்டுவிட்டது. அங்கீகாரமும் விருதுகளும் பாரம்தான். தேவையில்லாமல் அதைத் தூக்கிக்கொணடு அலைய வேண்டும். பிறகு வாசகர்கள் தமிழில் இல்லாமல் வேறு ஏதாவது ஒரு மொழியில் எழுதியிருந்தாலும் இதைவிட அதிகமாக கிடைத்திருப்பார்கள் என்று எனக்கு தோன்றவில்லை. பிரெஞ்சு போன்ற மொழியிலும் தீவிர இலக்கியத்துக்கு வாசகர்கள் குறைவுதான். அப்புறம் இப்படி குறைவாக இருப்பதுதான் நல்லதும்கூட என்று தோன்றுகிறது. இதை தெரிந்து கொண்டுதானே எழுதத் தொடங்கியது? எனவே, இதில் ஏமாற்றமடைய என்ன இருக்கிறது? அப்புறம் இது எல்லாம் எனக்கு வேண்டும் என்று சொல்வதற்கு நான் என்ன பெரியதாக



எழுதிக் கிழித்து விட்டேன்?


உயிர் இருக்கும் வரைக்கும் எதாவது செய்தாக வேண டும் என்பது நியதி. எழுது வதிலும் ஆர்வம் இல்லை. பெட்டிக்கடை போல் எதாவது வைத்துக் கொண்டு உட்காரலாம். ஆனால், நிச்சயம் வீட்டில் அனுமதிக்க மாட்டார்கள். நம்மால் அது முடியவும் செய்யாது. பொருட்களுக்குக் காசை எண்ணி வாங்கத் தெரியாது. எங்காவது போய் விட்டாலும் நிம்மதி கிடைத்துவிடுமா? தெரியவில்லை. வேறு வழியும் இல்லை. பகல் முழுவதும் சும்மாவே இப்படி இங்கே உட்காந்திருக்கிறேன்.

**- வண்ணநிலவன்**

# மறக்கவொண்ணா மொஸ்கோ நூல்கள்




சங்கம் வைத்து ஆண்ட மன்னர்களாயிருக்கட்டும், சட்ட சபை வைத்து ஆளும் தமிழாய்ந்த தமிழர்களாயிருக்கட்டும்.. இல்லை மாவட்டத்துக்கு மாவட்டம் அறிவைப் புதைக்கும் சுடுகாடாய் விளங்கும் இத்தனைப் பல்கலைக் கழகங்களாய் இருக்கட்டும், இவற்றில் தண்டச் சம்பளம் வாங்கிக் கொண்டு ஆறு கால் நாற்காலிகளாய் அலையும் ஆராய்ச்சியாளர்களாக இருக்கட்டும்... இவர்களால் தமிழில் தரமுடியாத பல்வேறு இயற்கை மற்றும் உலகக் கண்ணோட்டமுள்ள பல நூல்களை மொஸ்கோ பதிப்பகம் அழகுத் தமிழில் அச்சிட்டுக் கொடுத்திருந்தது.




"மனிதன் எங்ஙனம் பேராற்றல் மிக்கவனானான்", "நான் ஏன் தந்தையைப் போல இருக்கிறேன்", "பூமி எனும் கோள்", "பொழுதுபோக்கு பெளதிகம்" என்று பல நூல்களைப் பார்க்கையில், இப்படிப்பட்ட நூல்களை எழுதித் தயாரிக்கவில்லையென்றாலும் இங்குள்ள பாடநூல் குழுவினர் இவைகளையெல்லாம் பாடநூல்களாக வைப்பதற்கு என்ன கேடு வந்தது! வைத்தால் நம் அருமைப் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்கு அதுவும் தாய்மொழியில் எவ்வளவு பயனுள்ளதாய் இருக்கும் என்று இங்குள்ள எருமைகளின் மீது ஆத்திரம்தான் வருகிறது. அறிவியல் நூல்கள் மட்டுமல்ல, உலகக் கண்ணோட்டமுள்ள இலக்கிய விமர்சனங்கள், நாவல்கள், கார்க்கி, லியோ டால்ஸ்டாய், அன்டன் செகவ், மிகைல் ஷோலகேவ் போன்றோரின் குறிப்பிடத்தகுந்த கதைகள் மட்டுமல்ல ஓஸ்த்ரோவ்ஸ்ககி, பரிஸ் வசிலியெவ், ஜோன் ரீட் போன்ற செயற்களத்தின் போராளிகளையும் படைப்பாளிகளாக உலகுக்குக் காட்டி உத்வேகமளித்தவை மொஸ்கோ நூல்கள்.

இன்று அக்கிரகாரத்து ஆளாகவும், அமெரிக்கைகடாகவும் விளங்கும் ஜெயகாந்தன் கூட ருஷ்யப் புரட்சி சித்திரக்கதையின் மொழிபெயர்ப்பில் அசத்தியிருப்பார். "போயஸ் தோட்டமே நல்ல ஆள்" என்று போய்க் கிடக்கும் தா.பாண்டியன்தான் "நிலம் என்னும் நல்லாள்" நூலின் மொழியாக்கம் என்றால் உங்களால் நம்ப முடியுமா? இப்படி தமிழகத்தில் பலரிடமும் உள்ள படைப்பாற்றலையும், மனிதக் கூறையும் வெளிக் கொணர்ந்தவை மொஸ்கோ நூல்கள். ரா.கிருஷ்ணையா போன்ற எண்ணிறந்த மொழியாக்கப் படைப்பாளிகளை அடையாளம் காட்டியவையும் மொஸ்கோ நூல்கள்தான்.

சொல்ல பல இருந்தும் சுருக்கமாக இவைகளை நினைவுகூரும்படி சமீபத்தில் மீண்டும் நியூ செஞ்சுரி குடோனுக்கு சென்று மொஸ்கோ நூல்களை காணும்படி நேர்ந்தது. பத்தாண்டுகளுக்கு முன்பு நான் பார்த்த காட்சி இப்போது இல்லை. விசாலமான இடத்திலிருந்து மெல்ல மெல்ல கழிக்கப்பட்ட மொஸ்கோ நூல்களின் மிச்ச சொச்சம் அந்த வளாகத்தின் கடைசி தட்டு முட்டு சாமான்கள் போடப்படும் ஒரு தரமற்ற அறைக்குள் மூச்சு திணறும்படி கொட்டிக் கிடந்ததைப் பார்த்து நெஞ்சம் புழுங்கியது. ஏறத்தாழ கவனிப்பாரின்றி கை விடப்பட்டு குப்பை மேடாக அநத நூல்கள் கொட்டிக் கிடந்தும் அதன கெட்டி அட்டைகள், தாள்களை இறுகப் பிடித்துக் கிடந்தது. சும்மா இல்லை, சோவியத் பாட்டாளி வர்க்கத்தின் உறுதியான சோசலிச உழைப்பின் அடையாளம் அது.




வெறும் தொழிலுக்காக இந்த வேலையில் ஈடுபடுபவர்களால் இப்படி ஒரு பொறுப்புணர்ச்சியுடன் கூடிய நூல் தயாரிப்பை செய்ய முடியாது. ஒரு நூல், அது 1974 இல் அச்சிடப்பட்டிருக்கிறது. 37 ஆண்டுகளுக்குப் பிறகும் அந்த நூலின் முதுகில் இருக்கும் கம்பி துருவேறாமல், திசை விலகாமல் "கூலியுழைப்பும் மூலதனமும்" என்ற மார்க்சின் படைப்பை மதிப்புடன் பாதுகாத்து வைத்திருக்கிறது. திசை விலகிய நிறுவனமும் இதன் மதிப்பறியாமல் குப்பையாக கொட்டியிருக்கிறது. இத்தனை அலட்சியங்களுக்குப் பிறகும் மொஸ்கோ நூல்களின் வண்ணங்களோ, தாள்களின் தன்மையோ சீர்குலையாமல் இருப்பதைப் பார்க்கையில் எத்தனை பாட்டாளி வர்க்கக் கரங்களின் விருப்பார்வத்துடனும், முன் முயற்சியுடனும் இந்த நூல்கள் உலகுக்கு வழங்கப் பட்டிருக்கின்றன என்ற உணர்ச்சி நெஞ்சில் நிறைகிறது.

**- வினவு**


# அ.தி.மு.க.வின் போராட்ட உத்தி

# தி.மு.க. பயன்படுத்தத் தீர்மானம்

(சென்னை)

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு எட்டு மாதங்கள் ஆகியுள்ள நிலையில், அரசைக் கண்டித்து இதுவரை பெரிய அளவில், தி.மு.க., போராட்டங்கள் எதுவும் செய்யாத நிலையில், கடந்த தி.மு.க., ஆட்சியின் குறைபாடுகளைக் கண்டித்து, அ.தி.மு.க., நடத்திய தொடர் ஆர்ப்பாட்டங்களைப் போல, தற்போது தி.மு.க., பதில் ஆர்ப்பாட்டம் நடத்த தயாராகி வருகிறது.

ஆனால், அ.தி.மு.க.,வினரைப் போல மாவட்ட அளவில் நிர்வாகிகளை திரட்டாமல், உள்ளூர் நிர்வாகிகள் மூலம் பொதுமக்களை திரட்டி போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர். கடந்த தி.மு.க., ஆட்சியின் செயற்பாடுகளைக் கண்டித்து, அ.தி.மு.க., சார்பில் அடிக்கடி போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டத்தையும், யார் தலைமையில் போராட்டம் நடக்கும் என்பதையும் தலைமை அறிவிக்கும். இதைத் தொடர்ந்து போராட்டம் நடக்கும் மாவட்டத்தில் உள்ள ஒட்டுமொத்த நிர்வாகிகளும், அந்தப் போராட்டத்தில் பங்கேற்று கூட்டத்தை காண்பிக்க வேண்டும். இந்த பாணியில், அதி.மு.க., தொடர்ந்து பல ஆரப்பாட்டங்களை நடத்தியது.



# 45 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும்

(சென்னை)

டிசம்பர் மாத இறுதியில் பெரும்பாலும் புயல் தோன்றுவது அரிதான விஷயம். அதிலும் ஒரே திகதியில் தோன்றுவது அதைவிட அரிதானது. கடந்த 45 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தை அச்சுறுத்தும் வகையில், வங்கக் கடலில் டிசம்பர் 26 ஆம் திகதி ஒரு புயல் உருவாகி தாக்கியது. அப்போது கடலில் சென்ற ஒரு கப்பல் தரைதட்டி சென்னை அண்ணா சமாதி பின்புறம் ஒதுங்கியது. அதேபோல 2011 டிசம்பர் 26 ஆம் திகதி இப்போது 'தானே' புயல் உருவாகியுள்ளது.



இந்தியாவில் ஒக்டோபர் 20 ஆம் திகதி தொடங்கி டிசம்பர் 31 ஆம் திகதி வரையான இந்த கால இடைவெளியில் பெய்யும் மழை வடகிழக்கு பருவமழை என்றும், இதற்கு பிறகு பெய்யும் மழை குளிர்கால மழையாக வானிலை ஆய்வு மையம் எடுத்துக் கொள்கிறது.


வடகிழக்கு பருவமழைக் காலங்களில் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் தான் அதிக அளவில் காற்றழுத்தம், புயல் ஆகியவை உருவாகி பலத்த மழை பெய்யும் என்பது குறிப்பிடத் தககது.

# சட்ட மூலம் நிராகரிப்பு

(டில்லி)

லோக்பால் சட்ட மூலம் ராஜ்யசபாவில் நிறைவேற்றப் படவில்லை. கூச்சல், குழப்பம் காரணமாக மறு திகதி குறிப்பிடாமல் சபை ஒத்தி வைக்கப்பட்டது. லோக்பால் சட்ட மூலம் நேற்று முன்தினம் ராஜ்ய சபாவில் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து, அதை தற்போதைய நிலையில் நிறைவேற்ற, ஆளும் கட்சி கூட்டணியில் அங்கம் வகிக்கும் திரிணமுல் காங்கிரஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. மசோதாவில் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என, வலியுறுத்தியது.

குறிப்பாக, லோக் ஆயுக்தா விவகாரத்தில், மாநில அரசுகளின் உரிமையைப் பாதிக்கும் வகையில் லோக்பால் சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக, அந்தக் கட்சி எம்.பி.,க்கள் குற்றம் சாட்டினர். இதுதவிர வேறு பல எதிர்க்கட்சிகளும், பெரும்பாலான மாநிலக் கட்சிகளும் இதே கருத்தைக் கொண்டிருந்ததால், ராஜ்யசபாவில் பெரும்பான்மை இல்லாத ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு, கடும் நெருக்கடி ஏற்பட்டது.




ஹசாரே உண்ணாவிரதம் இரண்டே நாளில் முடிந்தது.
சிறை நிரப்பும் போராட்டமும் கேன்சல் -செய்தி

# றொட்டி போடும் பஞ்சாயத்து தலைவர்



(பனைமரத்துப்பட்டி)

உள்ளாட்சித் தேர்தல் செலவுக்கு வாங்கிய கடனை அடைக்க, அ.தி.மு.க.,வை சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர் ஒருவர், றொட்டிக் கடை வைத்து, அவரே றொட்டி தயாரிப்பாளராகப் பணிபுரிந்து வருகிறார். சேலம், பனை மரத்துப்பட்டி யூனியன், தாசநாயக்கன்பட்டி கிராம பஞ்சாயத்து தலைவராக, அ.தி. மு.க.,வை சேர்ந்த வேலுசாமி (வயது 56).

கடந்த 2011 உள்ளாட்சித் தேர்தலிலும் போட்டியிட்டு, பஞ்சாயத்து தலைவராக வெற்றி பெற்றார். உள்ளாட்சித் தேர்தல் செலவுக்கு, உறவினர்கள், நண்பர்களிடம் கணிசமான தொகையைக் கடனாகப்பெற்றார். தேர்தல் முடிந்துவிட்டதால், கடன் கொடுத்தவர்கள், அசல் மற்றும் வட்டித்தொகைக் கேட்டு வருகின்றனர்.

முன்னாள் பஞ்சாயத்துத் தலைவரான மனைவி லட்சுமியிடம், டீக்கடை பொறுப்பை ஒப்படைத்து விட்டு, றொட்டிக்கடையை, வேலுசாமி திறந்துள்ளார். தினந்தோறும், காலை6 மணி முதல், 10 மணி வரை, மாவு பிசைந்து, றொட்டி சுட்டு வருகிறார். காலை நேரத்தில், குடிநீர், தெருவிளக்கு, சாக்கடை உள்ளிட்ட பிரச்சினைகளைக் கூறவரும் பொதுமக்களிடம் பேசியபடியே, றொட்டி தட்டும் பணியில், வேலுசாமி ஈடுபட்டு வருகிறார்.. பஞ்சாயத்துத் தலைவராக இருக்கும் வேலுசாமி, கௌரவம் பார்க்காமல், அடுப்படியில் நின்று றொட்டி சுடுவதை, மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

# இந்தியாவில் மருந்து அதுவே வெளிநாடுகளில் போதைப்பொருள்

(சென்னை)

இந்தியாவில் இருந்து, மலேசியா உள்ளிட்ட, தெற்காசிய நாடுகளுக்கு போதை மருந்து கடத்தும் கும்பல் சிக்கியது. முதறகட்ட விசாரணையில், நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சர்வதேச சந்தையில், 1,000 கோடி ரூபாய் மதிப்புள்ள, 5,100 கிலோ போதை மருந்து . பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.


இந்தியாவில் மருத்துவத்திற்கு பயன்படும் எபிடிரின், கேடமைன் உள்ளிட்ட மருந்துகள், உலகின் பல்வேறு நாடுகளில் போதைப் பொருட்களாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 26 ஆம் திகதி நள்ளிரவு, அதிகாரிகள் கொண்ட குழு, ஐதராபாத்தில் உள்ள, ஜிடிமெட்லா என்ற இடத்தில் இயங்கி வரும், எபிடிரின் மருந்து தயாரிப்பு தொழிற்சாலையை கண்காணித்தது அப்போது, அங்கு நின்றிருந்த ஒரு காரில், சந்தேகபடும்படியாக இருவர் அமர்ந்திருந்தனர்.

அவர்களிடம் அதிகாரிகள் விசாரணை நடத்திய போது, எபிடிரின் மருந்தை கடத்துவதை ஒப்புக் கொண்டனர். மேலும், சென்னையிலிருந்து வரும் இருவரிடம் மலேசியாவிற்கு கொணடு செல்வதற்காக போதை மருந்தை வைத்திருப்பதாகவும் தெரிவித்தனர். அவர்கள் பயன்படுத்திய காரில்

இருந்து, 100 கிலோ எபிடிரின் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி, சென்னையில் இருந்து ஐதராபாத்திற்கு விமானம் மூலம் சென்ற இருவரை விமான நிலையத்தில் அதிகாரிகள் கைது செய்தனர். அவர்கள் கொடுத்த தகவலை அடுத்து, ஐதராபாத்தில் இயங்கி வந்த எபிடிரின் மருந்துத் தயாரிப்பு தொழிற்சாலையில் மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தி பறிமுதல் செய்யப்பட்ட மருந்தின் மொத்த உள்ளூர் மதிப்பு, 40 கோடி ரூபாய் சர்வதேச சந்தை மதிப்பு, 1,000 கோடி ரூபாய்.

# மக்களின் நம்பிக்கைகளுக்கு எதிராக விஞ்ஞானி அறிவியல் பிரசாரம்



(சென்னை)

மூடநம்பிக்கைகளைக் கைவிட்டு, அறிவியல் ரீதியில் நிரூபிக்கப் பட்ட விஷயங்களை நம்ப வேண்டும் மூட நம்பிக்கைகளால் ஏற்படும் ஆபத்துகளில்

இருந்து மனித இனத்தை அறிவியல் காத்து வருகிறது, என, நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் தெரிவித்தார். நேற்று முன்தினம்

இடம்பெற்ற நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் இன்றைய நவீன அறிவியலுக்கு, ஐரோப்பாவில், 1600 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட றோயல் சொசைட்டி தான் அடிப்படையாக அமைந்தது. அறிவியல் பல்வேறு காலகட்டங்களை கடந்து, காலமாற்றத்துக்கு ஏற்ப தன்னை தானே சரி செய்து கொண்டு வளர்ந்து வந்துள்ளது. பரிசோதனைகளின் அடிப்படையில் நிரூபிக்கப்படும் நம்பிக்கைகள், சிந்தனைகளே அறிவியல். இவை, உண்மைகளின் அடிப்படையில் சொல்லப்படுபவை.

அறிவியலில் கூட ஒரு காலகட்டத்தில் சரி எனக் கருதப்படும் விஷயம் மற்றொரு காலத்தில் தவறு என நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஜோதிடம் அறிவியல் பூர்வமானது அல்ல. கோள்கள், நட்சத்திரங்கள் நமது தலைவிதியை நிர்ணயிக்கக் கூடியவை அல்ல. பிறக்கும்போதே நம் தலைவிதி நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது என்பதற்கு அடிப்படை ஆதாரம் ஏதும் இல்லை. நவீன விஞ்ஞானம் மருத்துவத்துடன் கை கோர்த்ததால் தான், மனிதனின் சராசரி

ஆயுட்காலம் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. மருத்துவத்திலும் அறிவியல் பூர்வமான விஷயங்களை மட்டுமே நம்ப வேண்டும். ஆதாரபூர்வமாக

நிரூபிக்கப்படாதவற்றை நம்பக்கூடாது. சுற்றியிருக்கும் உலகத்தை நம்பிக்கையின் அடிப்படையில் பார்க்காமல் அறிவியல் பூர்வமாக பார்க்க வேண்டும்.

பலமுறை பரிசோதிக்கப் பட்ட விஷயங்களை மட்டுமே ஏறறுக்கொள்ள வேண்டும். அறிவியல் பூர்வமாகக் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளால் பெரியம்மை முற்றிலும் ஒழிக்கப் பட்டுள்ளது.

அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படாத நம்பிக்கையின் அடிப்படையிலான மருத்துவ முறைகளை ஏற்றுக் கொள்ளகூடாது எனத் தெரிவித்தார்.

# சீனாவில் வைரம் விற்ற இந்தியர்கள் 12 பேர் சிறையிலிருந்து விடுதலை

(பீஜிங்)

கொங்கொங் வியாபாரிகளிடமிருந்து முறைகேடாக வைரத்தைப் பெற்று, அதை சீனாவில் குவாங்சு மாகாணத்தில் விற்க முயன்ற போது, 22 இந்தியர்களை கடந்த ஆண்டு சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

37 கோடி ரூபாய் பெறுமானமுள்ள வைரங்களைக் கடத்தியதாக, இவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, ஆறு ஆண்டு சிறைத் தண்டனை அறிவிக்கப் பட்டது. இவர்களை விடுவிக்க கோரி, மத்திய அரசு மற்றும் குஜராத் அரசின் சார்பில் சீன அரசிடம் வற்புறுத்தப்பட்டது.

இதைத்தொடர்ந்து 12 பேரின் தண்டனைக் காலம் குறைக்கப் பட்டு, இந்தியாவுக்கு திருப்பி



அனுப்ப சீன நீதிமன்றம் கடந்த 8 ஆம் திகதி உத்தரவிட்டது. குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த 12 பேரையும், தாயகத்துக்கு திருப்பி அனுப்ப குவாங்சு மாகாணத்தில் உள்ள இந்தியத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விமானத்தில் 12 பேருக்கும் சீட் கிடைத்ததும் அவர்கள் இந்தியாவுக்கு உடனடியாக திருப்பி அனுப்பபபடுவார்கள் என, குவாங்சுவில் உள்ள, இந் திய தூதரக அதிகாரி இந்திரா மணி பாண்டே தெரிவித்துள்ளார்.

# நைஜீரியாவில் 90 ஆயிரம் பேர் இடப்பெயர்வு

உலகச் செய்திகள்



நைஜீரியாவின் டமாடரு பகுதியில் இடம் பெற்றுவரும் மோதல்கள் காரணமாக 90 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த சில நாட்களாக கிளர்ச்சியாளர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. கிறிஸ்மஸ் தினத்தன்று கிளர்ச்சியாளர்களால், தலைநகர் அபுஜாவிலுள்ள சில தேவாலயங்களில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து பாடசாலைகள், பள்ளிவாசல்கள் என்பவற்றை இலக்குவைத்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆபிரிக்காவின் முக்கிய நாடான நைஜீரியாவில் கலாசாரம், ஜாதி வேறுபாடுகள் காரணமாக மதப் பிரிவினரிடையே ஏற்படும் வன்முறைகளால் ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# குர்திஸ் தீவிரவாதிகள் மீது துருக்கி விமானத்தாக்குதல்

துருக்கியின் குர்திஸ் பிராந்திய கிராமமொன்றில் கடந்த புதன்கிழமை இரவு இடம் பெற்ற விமானத் தாக்குதலில் 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஈராக்குடனான எல்லைப் பகுதியிலுள்ள சேர்னாக் மாகாணத்தின் உலுதுரே கிராமத்தில் மேற்படி விமானத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. தாம் குர்திஸ் தீவிரவாதிகளை இலக்குவைத்து தாக்குதல் நடத்தியதாக, துருக்கி இராணுவம் தெரிவித்துள்ளது. குறித்த பகுதியில் பொதுமக்கள் எவரும் இருக்கவில்லை எனவும் தீவிரவாதிகள் அப்பகுதியில் காணப்படுவதாக தகவல் கிடைத்ததையடுத்து தாக்குதல் நடத்தியதாகவும் துருக்கி இராணுவ உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலின்போது 23 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் சடலங்கள் எரிந்தநிலையில் காணப்படுவதாகவும் குர்திஸ் சார்பு



அலுவலகர் ஒருவர் அறிவித்துள்ளார். துருக்கித் தொழிலாளர் கட்சி எனும் கிளர்ச்சிக் குழுவினர் ஒக்டோபர் மாதம் நடத்திய தாக்குதலில் 24 துருக்கிய இராணுவச் சிப்பாய்கள் பலியானார்கள். அதன்பின் துருக்கியப் படைகள் அடிக்கடி விமானத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முப்பது வயதுகூட நிரம்பாத வடகொரியாவின் புதிய தலைவர்



வடகொரியாவின் தலைநகர் பியொங்யாங்கில் பெருமளவு மக்கள் முன்பாக கிம் யாங் இல் அவர்களின் இளைய மகன நாட்டின் அதியுயர் தலைவராக பிரகடனம் செய்யப்பட்டார். தனது தந்தையின் நினைவு ஆராதனைக்கு தலைமையேற்ற கிம் யாங் உன் அவர்களுக்கு இராணுவ மற்றும் கட்சியின் உயர் தலைவர்கள் மரியாதை செலுத்தினார்கள்.

தேசம், இராணுவம் மற்றும் ஆளும் தொழிலாளர் கட்சியின் புதிய அதியுயர் தலைவராக கிம் யாங் உன் போற்றப்பட்டார். தனது தந்தையைப் போன்ற கொள்கை மற்றும் குணாதிசயங்களை கொண்டவர் அவர் என்று விவரிக்கப்பட்டார்.

முப்பது வயதுகூட நிரம்பாதவர் கிம் யாங் உன். கடந்த இரண்டு மூன்று வருடங்களாகத்தான் இப்படி ஒருவர் இருப்பதே அந்நாட்டு மக்களுக்குத் தெரியும். கிம் யாங் உன்னின் தகுதி, திறமை, அனுபவம் தொடர்பில் பரவலாக சந்தேகங்கள் நிலவினாலும், அண்மையில் இவரையே தனது வாரிசாக அறிவித்திருந்தார் கிம் யாங் இல். நாட்டின் அதியுயர் தலைவர் பதவியில் கிம் யாங் உன் இருந்தாலும் அவரது அதிகாரம் மிக்க மாமாவான ஜங் சொங் தேக் தான் உண்மையான அதிகார மையமாக விளங்குவார் என்று சில விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## ஈரானின் அணு ஆயுதங்களால் எமக்கு அச்சுறுத்தல் இல்லை



ஈரானின் கையில் அணு ஆயுதங்கள் இருந்தாலும், அது நேரடியாக இஸ்ரேலுக்கு அச்சுறுத்தல் கிடையாது என இஸ்ரேல் மொசாட்டின் உளவுத்துறைத்தலைவர் தாமிர் பார்டோவின் வெளிப்படையாக கருத்துத் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த விளக்கம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும், இஸ்ரேலுக்கு ஈரான் இராணுவ ரீதியில் அச்சுறுத்தல் உள்ளது. ஆனால், அவர்கள் கைகளில் அணு ஆயுதங்கள் கிடைத்தால், இஸ்ரேலுக்கு கடும் அசசுறுத்தல் என்று சொல்லப்படுவதைத்தான் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்தார். ஈரானின் கைகளில் அணு ஆயுதங்கள் வந்தால், அதற்கு எப்படி பதிலடி கொடுக்க வேண்டும் என்பதும் எமக்குத் தெரியும். பதிலடி கொடுப்பதற்கு தேவையான சாதனங்களும் எம்மிடம் உள்ளன என்றும் உளவுத்துறையின் தலைவர் தெரிவித்துள்ளார். இக்கருத்து நாட்டின் பிரதமர் நாடாளுமன்ற தொடக்க நிகழ்வில் எம்.பி.க்களுக்கு ஆற்றிய உரையில் கூறியுள்ள கருத்துக்கு நேர்மாறாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஈரானின் கைகளில் எந்த நிமிடமும் அணு ஆயுதம் தோன்றலாம் என்ற நிலை உள்ளது. அவர்களிடம் அணு ஆயுதம் கிடைத்தால், பிரதான அச்சுறுத்தல் எமக்குத்தான் என பிரதமர் பெஞ்சமின் நெத்தான்யாகு தெரிவித்திருந்தார்.

உளவுத்துறை மொசாட், ஈரானின் அணுசக்தி நிலையங்களை அழிப்பதற்கு தொடர்ந்து திட்டங்களைத் தீட்டிக்கொண்டும், உளவாளிகளை அனுப்பிக் கொண்டும் உள்ளது. ஈரானிய அணு ஆலைகளில் முக்கியமான இரண்டை குண்டு வைத்துத் தகர்க்கும் மொசாட்டின் முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்திருந்தன. ஆனாலும் முயற்சிகளை மொசாட் இன்னமும் கைவிட்டதாக தெரியவில்லை.

## இஸ்ரேலிய விமானப்படையில் முதன்முதலாக பெண் விமானிகள்




இஸ்ரேலிய விமானப்படையில் 5 பெண்கள் விமானப்படை விமானிகளாக பணியில் இணைகிறார்கள். இஸ்ரேலிய விமானப்படையின் பட்டமளிப்பு நெகெவ் நகரிலுள்ள ஹட்செரிம் விமானத்தளத்தில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்றது.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தான்யாகு நேரில் கலந்துகொண்டு உரையாற்றும் போது, எமது நாட்டின் பழமைவாதிகள் சிலர் பெண்கள் இராணுவப் பணிகளில் ஈடுபடக்கூடாது என்கிறார்கள். ஆனால், எமது அரசின் நிலைப்பாடு அதுவல்ல. எமது பெண்களை விமானப் படையில் அமர வைப்பதில் எமக்கு தயக்கம் ஏதுமில்லை எனத் தெரிவித்தார்.

# மெய்தான் பாருங்கோ...

## புதிய சிந்தனைகள் பூக்கட்டும்



அண்டைக்கொருக்காப் பாருங்கோ பரந்தன் பக்கம் ஒரு அலுவலாப் போயிருந்தனான் போன கையோடை அலுவல் முடிஞ்சாப்போல எப்பன் தண்ணி குடிப்பமெண்டு ஒரு தேத்தண்ணிக் கடைக்குள்ள போனா அதுக்குள்ள எனக்குத்தெரிஞ்ச ஒரு பொடியன் 'ரீ' குடிச்சுக்கொண்டு இருந்தான் பாருங்கோ என்னால அவனை மட்டுக்கட்டேலாமல் போச்சுது. ஆனா அவன் என்னைக்கண்டிட்டு அண்ணை! நீங்கள் சின்னச்சாமிதானே...? எண்டுகேட்டான் அதுக்குப் பிறகுதான் எனக்கு அவனைப் பற்றியும் அவனுக்கு என்னைப் பற்றியும் தெரியவந்தது.

அவனைப் பற்றிச் சொல்லுறதெண்டால் உங்களுக்கு நிறையச்சொல்லலாம். ஆனா எனக்கு நேரம் பத்தாது. சுருக்கமாச் சொல்லுறன் கேட்டுக்கொள்ளுங்கோ.

அவன் முன்னம் இயக்கத்தில இருந்தவன். ஒரு கால் இல்லை பொய்க்காலோடை திரியுறான்.போரும் -போராட்டமும் குடுத்த பரிசு அது! தடுப்பில இருந்திட்டு இப்பதான் வெளியால வந்திருக்கிறான். எங்கட ஊர்ப்பொடியன்தான். ஆனந்தபுரப்பக்கம் கிபிர் குண்டடிச்சதில அவன் தாய், தேப்பன், சகோதரங்கள் எல்லாம் அந்த ஒரு குண்டோடை குழிக்குள்ள போட்டுதுகள் இப்ப எஞ்சியிருக்கிறது அவன் ஒருத்தன் தான்.

அவன் சொல்லுறான்...

சாமியண்ணை! நாங்கள் எல்லாப் பக்கத்தாலையும் ஏமாந்திட்டம். இப்ப இருக்கப்பட்ட ஆட்களால ஏமாத்தப் பட்டுக்கொண்டிருக்கிறம். சிலதுகள் 'புலுடா அரசியல்' நடத்தினபடி.. சனத்துக்கு போக்குக்காட்டிக்கொண்டு திரியுதுகள். தங்கட செய்கை காரியங்களைத் தட்டிக் கேட்க ஆளில்லையெண்ட துணிவும், 'போட்டுத்தள்ள' இயக்கம் இல்லையெண்ட எண்ணமும் எங்கட தமிழ்ச்சனத்தை தவறான பாதைக்கு கொண்டுபோகுது. உது நல்லதுக்கு இல்லை.

நான் வாயில வடையைக் கடிச்சுக்கொண்டு, அவன் சொல்லுறதை கேட்டுக்கொண்டிருந்தன் பாருங்கோ!

சாமியண்ணை! நாங்கள் போராட வெளிக்கிட்டு எவ்வளவோ உயிர்ப்பலியளைக் குடுத்திட்டு நிற்கிறம். இத்தனை அழிவுகள், அநியாயங்களுக்குப் பிறகும் நாங்கள் எங்கட இலக்கை அடையோலாமல் போச்சுது. இதுக்குப்பிறகும் செத்துப் போன பாம்புக்கு உயிரூட்டுற வேலையளைச் சிலபேர் செய்ய வெளிக்கிடுகினம்.

பொடியன் என்னைத்தைச் சொல்லவாறான்... எண்டது எனக்கு சாடையா விளங்க, நான் அவன் சொல்லுறதைக் கேட்டுக்கொண்டு இருந்தன்.

இஞ்சை போராட்டம் எண்டது முள்ளிவாய்க்காலோடை முடிஞ்சது முடிஞ்சதுதான். இனி அது எங்கட பக்கத்தில முளைவிடுகிறஅளவுக்கு சாத்தியமில்லை. அடிபாட்டு அரசியல்தான் வேணுமெண்டு ஆராவது விரும்பினால் அவையள் வெளிநாட்டுக்குப் போய் கோட்டும் சூட்டும் போட்டுக்கொண்டு அங்கத்தே றோட்டுகளில நிண்டு கோசம் போடட்டும் எங்களால இனி ஏலாது. அந்தளவுக்கு நாங்கள் போராலையும் போராட்டத்தாலையும் நல்லாப் பட்டுக்களைச்சுப் போனம்.

பொடியன் சொல்லிக் கொண்டிருந்தான் நான் கேட்டுக்கொண்டிருந்தன். அடிபாடெண்டு வெளிக்கிட்டு இவனைப் போல எத்தனை பெடிபெட்டையள் இப்படி அந்தரிச்ச சீவியமாய் வாழுதுகளோ. ஆர்கண்டது? அதோடை பாருங்கோ தடுப்பில இருக்கேக்கை பல பேரை சுயமாகச் சிந்திக்கவைச்சிருக்கு ஏன்... எதற்காக...இப்பிடி நடந்ததெண்டும், இனி எப்படி நடக்க வேணுமெண்டதையும் போதிச்சிருக்குது. தடுப்பால வந்ததுக்ள் நடந்து முடிஞ்ச சண்டைக்குப் பழிக்குப்பழிவாங்க வேணுமெண்ட சிந்தனையை அகற்றி இந்தப் பொடியனைப் போல அறிவு பூர்வமாச் சிந்திச்சினமெண்டால் நல்ல ஆரோக்கியமாய் இருக்கும் கண்டியளே!

பட்டுக்களைச்சவன் தெளிந்த புத்தியோடை சொல்லுறதை ஒருத்தரும் பரவாய் பண்ணாமல் விடக்கூடாது பாருங்கோ. ஆனாலும் எனக்கு கொஞ்சம் யோசனையாத்தான் கிடந்தது. சும்மாகிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி... மாதிரி தடுப்பால வந்து நிற்கிற பொடி பொட்டையளை இருக்கப்பட்டதுகள் திரும்பவும் பழுதாக்கிப் போடுங்களோ... எண்ட பயமாகவும் கிடக்குது.

ஆனா இந்தப் பொடியன் மாதிரி எல்லாரும் புதிய சிந்தனையில மனதைத் திருப்பினால், அதுகளை எந்த அரசியல் கொம்பனும் சரி, அடாவடி வம்பனும் சரி ஒண்டும் செய்யேலாது கண்டியளே!

- சின்னக்குட்டி சின்னச்சாமி

# எதிர்ப்பு அரசியலும் தமிழ் சமூகத்தின் எதிர்காலமும்

- தேவன் (கனடா)

Love is better than anger
Hope is better than fears
Optimism is better than despairs

சமகால தமிழ் அரசியல் போக்குகளில் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் பல விந்தைகளும் அபத்தங்களும் அரங்கேறிவருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. தமிழரின் விடுதலை, தமிழ்த் தேசியப் புனிதம், ஈழசுதந்திரம் ஆகியவற்றின் பெயரில் அரங்கேற்றப்பட்ட கொலைகள், மனித உரிமை மீறல்கள் பற்றி எதிர்த்துக் குரல்கொடுக்காத தமிழ் சமூகத்தின் ஒருபிரிவினர் 2009க்குப் பின்னர் மனித உரிமைகள், போர்க்குற்றம், மரண தண்டனை, மானிட நேயம், மனித உயிர்கள் பற்றி பேசுவது அபத்தம்.

தமிழரின் பிரச்சினை தொடர்பாக புலிகளும் தமிழ்க் கூட்டமைப்பும், பூகோள ரீதியாக சாத்தியப்படாததும் நடைமுறைக்குச்சாத்தியப்படாத அரசியலையே முன்னெடுத்தனர். அதனால்தான் தமிழ்க்கூட்டமைப்பு முள்ளிவாய்க்கால் மானிட அழிவிற்குப் பின்பும் அரசுடனான பேச்சுவார்த்தையில் அவ்வாறே நடந்துகொள்கிறது. இது தமிழரின் புதிய தலைமையை வலியுறுத்தி நிற்கிறது.

‘கடந்தகால வரலாற்றுத் தவறுகளை கூட்டமைப்பு திருத்திக்கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை என்பதுடன் பிராந்திய, பூகோள அரசியல் பற்றிய ஞானம், தொலை நோக்கு, ராஜதந்திரம் இல்லாத அணுகுமுறையிலேயே தொடர்ந்தும் கூட்டமைப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றது.’

புலிகள் போலவே கூட்டமைப்பு தாம் புனிதமானவர்களாகவும் அசைக்க முடியாத அரசியல் சக்தியாகவும் காட்டிக்கொள்கின்றார்கள்.

காலத்துக்குக் காலம் சிங்கள அரசாங்கங்களால் முன்வைக்கப்பட்ட தீர்வுகள், மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளையும் குழப்பியடித்து தமிழர்களை சொல்லொணாத் துன்பத்தில் தள்ளிவிட்டு அந்தப் பழியை மற்றைய தமிழ் அரசியல் கட்சிகளில் பழியைச் சுமத்துகின்றது.

‘ஒரு வரலாற்றுத் தோல்வி ஒரு பூகம்பத்தைப் போன்ற வரலாற்றுப் பேரழிவையும் ஏற்படுத்தும்’ என்று டோனி ஜீட் கூறியதற்கு ஏற்பவே முள்ளிவாய்க்கால் அனர்த்தமும் நடந்தேறியுள்ளது. இவ்வளவு அனர்த்தங்களுக்கு மூலகாரணமான கூட்டமைப்பு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதும் செய்யாது, தொடர்ந்தும் அதே அழிவுப் பாதையிலேயே பயணிக்கிறது.

70களின் பிற்பகுதியில் தமிழ் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு சோறு முக்கியமில்லை சுதந்திரம்தான் முக்கியம் என வட்டுக்கோட்டை தீர்மானத்தை பிரகடனம் செய்தார்கள். அன்று தொடங்கிய தனி ஈழத்துககான போர் புதுமாத்தளனில் முடிவடையும் போது தமிழ் மக்களுக்கு சுதந்திரமும் கிடைக்கவில்லை, சோறும் கிடைக்கவில்லை.

இனவெறி அரசியலாலும், பிரிவினை கோசங்களாலும் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகம் சின்னாபின்னப்பட்டு பெரிய விலைகொடுத்துள்ளது என்பதை கூட்டமைப்பு இன்னும் ஆழமாக உணர்ந்துகொள்ளவில்லை என்பதே சமகால அரசியல் போக்காக இருக்கிறது.

ஏனெனில் யுத்தத்தினால் பேரவலத்தை சந்தித்த மக்களிடம் கூட்டமைப்பு மன்னிப்புக் கோரவுமில்லை, பிராயச்சித்தம் செய்வதற்கான நடைமுறைச்சாத்தியமான அரசியலையும் முன்னெடுக்கவில்லை. மாறாக அரசுதான் காரணம் என குற்றம்சாட்டுவதுடன் ஈழக்கோரிக்கையையும் கைவிடாது மீண்டும் குரோத அரசியலையும் இனவாத அரசியல் பிரச்சாரத்தையும் முன்னெடுக்கிறது. அதேநேரம் சர்வதேசத்தை தலையிட வைக்கவும் பகீரதப் பிரயத்தனம் செய்கிறது.

அமெரிக்கா தலைமையிலான சர்வதேசம் தலையிட்ட அல்லது ஆக்கிரமித்த நாடுகளின் அவலங்களை நாம் காண்கிறோம். அண்மையில்கூட லிபியாவின் அவலத்தையும் நாம் பார்த்தோம்.

புலிகளால் உருவாக்கப்பட்ட த.தே. கூட்டமைப்பில் அரசியல் மாற்றத்தை எவ்வாறு நாம் எதிர்பார்க்க முடியும். அதே பாணியிலேயே பேச்சுவார்த்தையிலிருந்து வெளியேறுவது போன்ற பூச்சாண்டிகளைக்காட்டுவதும் எச்சரிப்பதுமான கேலிக்கூத்துக்கள் அரசியல் அரங்கில் அரங்கேறிவருகின்றன.

கூட்டமைப்பு, இந்திய மாநில சுயாட்சி போன்ற அமைப்பு தொடர்பாக அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றது.

இதேபோன்ற தீர்வு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் தமிழருக்கு கிடைத்திருந்தது. ஆனால் அன்றைய ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழர்கள் பாதிக்கப்பட்டவர்கள் நமக்கு கிடைக்கும் தீர்வை தாம்பாளத்தில் பெறத் தயார் இல்லை எனவும் எதையும் நம் மீது திணிக்க முடியாது என்றும் தமிழ் சமூகத்துக்கு தேவையானவற்றை போராடிப் பெறுவோம் எனக் கூறியிருந்தார். இந்தியாவுடன் அனுசரித்துப்போன மாற்று அரசியல் தலைவர்களை துரோகிகள் எனக் கூறி புலிகள் வேட்டையாடினார்கள்.

இன்று அரசாங்கமும் தமிழ்க் கூட்டமைப்பும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் கடந்தகால வரலாற்றுத் தவறுகளை கூட்டமைப்பு திருத்திக்கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை என்பதுடன் பிராந்திய, பூகோள அரசியல் பற்றிய ஞானம், தொலை நோக்கு, ராஜதந்திரம் இல்லாத அணுகுமுறையிலேயே தொடர்ந்தும் கூட்டமைப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றது.

‘பாதிக்கப்பட்ட பொதுமக்களிடம் மன்னிப்புக்கோராமல் தாங்களே தமிழர்களின் பிரதிநிதிகள் எனவும் தமது கை எப்பொழுதும் சுத்தமாகவே இருக்கிறது எனவும் சிங்கள அரசியல்வாதிகளின் கைகள் அசுத்தமானவை எனவும் ஓயாது பிரச்சாரம் செய்கின்றனர். அவலங்களை வைத்து சுயலாப அரசியல் நடாத்துவதே தமிழ் சமூக பாரம்பரியமாக இருக்கிறது.’

இந்தக் காரணங்களால்தான் தொடர்ந்தும் தமிழ் சமூகத்திற்கு இவ்வளவு பின்னடைவு ஏற்பட்டது என்பதை கூட்டமைப்பு உணரத் தயாராக இல்லை. குறிப்பாக சம்பந்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா, அரியநேத்திரன், சிறிதரன் போன்றவர்களின் கருத்துக்கள், அறிக்கைகள் தமிழ் - சிங்கள இனவாதத்தை மீண்டும் தூண்டுவதாகவே இருக்கிறது. இவர்கள், புலிகளால் கொல்லப்பட்ட பொது மக்கள், அரசியல் தலைவர்கள் பற்றி வாயே திறக்காமல் பாதிக்கப்பட்ட பொதுமக்களிடம் மன்னிப்புக்கோராமல் தாங்களே தமிழர்களின் பிரதிநிதிகள் எனவும் தமது கை எப்பொழுதும் சுத்தமாகவே இருக்கிறது எனவும் சிங்கள அரசியல்வாதிகளின் கைகள் அசுத்தமானவை எனவும் ஓயாது பிரச்சாரம் செய்கின்றனர்.

அவலங்களை வைத்து சுயலாப அரசியல் நடாத்துவதே தமிழ் சமூக பாரம்பரியமாக இருக்கிறது. அத்துடன் கோட்சே போன்றவர்களை உருவாக்குவதும் அவர்களை ஆதரித்துப் பேசும் அரசியல்வாதிகளை தேர்தலில் வாக்களித்து பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளும் போக்கே அரசியல் போக்காக இருக்கிறது.

‘முள்ளிவாய்க்கால் பிணக் குவியலுக்கும், தமிழ் சமூகத்தின் இன்றைய அவலத்துக்கும் சிங்கள தேசியவாதம் மட்டும் காரணமல்ல. யாழ்ப்பாண மேலாதிக்கம், தமிழ் தேசிய வாத இனவாதப் போக்கே காரணம் என அரசியல் புரியாத குழந்தைக்குக் கூட புரியும்.’

இத்தகைய போக்குகளில் இருந்து விடுபட்டு தமிழர் சமூகத்தில் சிறந்த அரசியல் தலைமை உருவாக வேண்டும். தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக காலம் காலமாக அரசியல் தீர்வுகள் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. அவை தமிழ், சிங்கள அரசியல் வாதிகளாலேயே குழப்பியடிக்கப்பட்டுள்ளன. இதில் முக்கியமான இரண்டைக் குறிப்பிடலாம். ஒன்று புலிகளால் கொல்லப்பட்ட ராஜீவ் காந்தியின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம். இரண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவினால் முன்வைக்கப்பட்ட தீர்வு.

புலிகளால் யதார்த்தவாதி என வர்ணிக்கப்பட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புலிகளை அழிப்பதில் காட்டிய வேகம், விவேகம் தமிழர் உரிமைப் பிரச்சினையில் ஆமை வேகத்திலும், முரண்பாடாகவும் செயற்படுவது துரதிர்ஷ்டமானது. 2009க்கு பின்னர் எந்தவித அழுத்தமும் இல்லாமலே 13வது அரசியல் யாப்பின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரப் பகிர்வை மேற்கொண்டிருக்க வேண்டும். இனங்களுக்கிடையில் உள்ள முரண்பாடுகள் தீர்க்கப்படாமல் வேறு அரசியல் வெற்றி இல்லை என்பதை மகிந்த அரசு உணர வேண்டும்.

அதேசமயம், சிறுபான்மையான தமிழர்கள் பெரும்பான்மையான சிங்கள மக்களையும் சக சிறுபான்மை சமூகங்களையும் அச்சுறுத்தி, பல பில்லியன் பெறுமதியான பொருளாதாரச் சேதங்களையும் உயிரிழப்புக்களையும், மீளப்பெறமுடியாத சேதங்களையும் விளைவித்துள்ளார்கள்.

தமிழ் சமூகத்தின் இன்றைய கையறு நிலைக்கும் வன்னியில் உள்ள ஒரு விவசாயிக்கு மண்வெட்டி இல்லாத நிலைக்கும் யார் காரணம் என்பதை கூட்டமைப்பு உரத்து சிந்தித்து இதற்கு பதில் கூறவேண்டும். சிறிமாவின் ஆட்சிக்காலத்தில் வடகிழக்கு விவசாயிகளுக்கு செல்வம் கொழிக்கும் வரப்பிரசாதமாக இருந்தது. இந்த நிலைமைகளை தலைகீழாக யார் மாற்றி அமைத்தது என்பதை கூட்டமைப்புத் தலைவர்கள் ஆழ்ந்து நேர்மையாக சிந்திக்க வேண்டும்.

உலக வரலாற்றில் கறுப்பின மக்கள் மாதிரி இன ஒடுக்குமுறையை, இனவாதத்தை, வெள்ளை இனத்தவரின் மேலாண்மையை அனுபவித்த அளவிற்கு உலகப் பந்தில் வேறு எந்த மக்களும் இன ஒடுக்குமுறையை அனுபவித்திருக்க மாட்டார்கள். ஆனாலும் அவர்கள் அதற்குத் தீர்வாக பிரிவினையை தனிநாட்டுப் போராட்டத்தை இனவாத குறுந்தேசிய வாதத்தை முன்னிலைப்படுத்தாது நல்ல தலைமைப் பண்புள்ள சர்வ தேச சமூகம் அங்கீகரிக்கக் கூடிய தலைவர்களை உருவாக்கி இன ஒடுக்குமுறைக்கு எதிராகவும், மேலாண்மைக்கு எதிராகவும் அகிம்சை வழியில் போராடி அரசியல் ரீதியாக வெற்றி பெற்றதுடன் அரசியல் அதிகாரங்களில், தேசத்தின் உயர் பதவியிலும் பங்கெடுப்பதுடன் பல்வேறு துறைகளிலும் பிரகாசித்து உலக மக்களுக்கு முன்னுதாரணமாக விளங்குகிறார்கள்.

அடிமைத்தனத்தை மேலாண்மையை எப்படி எதிர்த்துப் போராடுவது என்பது பற்றி நம்மவர்கள் காந்தி, நெல்சன் மண்டேலா, மாட்டின் லூதர் கிங் போன்ற தலைவர்களிடம் கற்கவேண்டும்.

நமது ஈழப்போரானது யாழ்ப்பாண மேலாதிக்க வெறிபிடித்த அப்புக்காத்து பரம்பரையினால் முடுக்கிவிடப்பட்டது. அத்துடன் குறுந்தேசிய வெறியுடன் சிங்கள சமூகத்தை நீங்கள் வேறு ஆள், நாங்கள் வேறு ஆள் எனவும், இஸ்லாமிய சமூகத்தை இனச் சுத்திகரிப்பு செய்து வெளியேற்றி, மலையக சமூகத்தை தோட்டக்காட்டான் என்று விளித்து, கிழக்கு மாகாண மக்களின் வாழ்வையும் தனது மேலாதிக்கத்துக்கு இரையாக்கிக் கொண்டது.

முள்ளிவாய்க்கால் பிணக் குவியலுக்கும், தமிழ் சமூகத்தின் இன்றைய அவலத்துக்கும் சிங்கள தேசியவாதம் மட்டும் காரணமல்ல. யாழ்ப்பாண மேலாதிக்கம், தமிழ் தேசிய வாத இனவாதப் போக்கே காரணம் என அரசியல் புரியாத குழந்தைக்குக் கூட புரியும்.

ஒரு அரசாங்க இயந்திரம், அரசியல் அதிகாரம் இனம், பால், சாதி, பிரதேச வேறுபாடு பார்க்காது அனைவரையும் ஒடுக்கும். ஆக அதற்கு ஒரு மாற்றம் தீர்வு வேணுமாயின் அனைத்து சமூகத்திலும் உள்ள முற்போக்கு சக்திகளின் ஊடாக ஜனநாயக பன்முக அரசியல் தலைமையை உருவாக்குவதுடன் அதன்மூலமே தமிழ் அடையாளத்தையும், மனிதத்தையும் இலங்கைத் தீவிலும் உலக அளவிலும் பாதுகாக்க முடியும்.

# பின்தங்கிய கிராமங்களில் நடமாடும் மருத்துவ சேவை



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பின்தங்கிய கிராமப்புற மக்களுக்கு தரமான மருத்துவ சேவையை வழங்கும் முகமாக விசேட நடமாடும் மருத்துவ சேவை வழங்கும் செயற்திட்டம் ஒன்றை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதன்படி அவுஸ்ரேலியாவிலிருந்து வருகைதரவுள்ள மருத்துவ குழுவினால் இலவச நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்படவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 2,3,4 ஆம் திகதிகளில் முறையே தினமும் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை நயினாதீவு பிரதேச வைத்தியசாலை, நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலை, மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை ஆகியவற்றில் இடம்பெறவுள்ளதால் குறித்த தினங்களில் வைத்தியசாலைகளுக்குச் சென்று பயனடையுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாபெரும் கலை விழா

(யாழ்ப்பாணம்)

'யுவர் பிரண்ட் பவுண்டேசன்' மற்றும் யாழ் நகர மைய றோட்டறக்ட் கழகம் இணைந்து நடாத்தும் 2012 ஆம் ஆண்டுக்கான மாபெரும் கலை, பண்பாட்டு விழா நாளை பி.ப 2.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கொக்குவில் கலாபவனம் வழக்கும் நிருத்தியோபாசனா, தவநாதன் றொபேட வழக்கும் குழல் இசை அரங்கு, ...ரும்பிராய் கலைக்கோவில் வழங்கும் நாட்டியாஞ்சலி, சொல்லருவி ஜசிந்தன் தலைமையில் வழங்கும் அமரிசை பட்டிமன்ற குழுவினரின் பட்டிமன்றம், சூரியன் எப்.எம் இன் ரீங்கார கவிஞர்கள், அறிவிப்பாளர் க.முகுந்தனுடன் இணைந்து வழங்கும் 'மனிதம் வேண்டும்' எனும் கவியரங்கமும் இடம்பெறவுள்ளதுடன், இலவசமாக மேற்படி நிகழ்வினை கண்டுகளிக்க முடியுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எப்.எஸ்)

## யாழ். மாநகர சபையின்....

இவர் விரைவில் தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாநகர சபை தேர்தலையடுத்து அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்த மற்றும் றிசாட் பதியுதீன் ஆகியோருக்கிடையில் மேற்கொள்ளப்பட்டிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமையவே சட்டத்தரணி ரமீஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்காக றீகன் யாழ். பிரதி மேயர் பதவியை இராஜனாமா செய்திருந்தார்.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸிற்கு வழங்கப்பட்ட உறுதிமொழியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிறைவேற்றியமைக்கான நன்றி தெரிவிப்பதாக அமைச்சர் றிசாட் மேலும் தெரிவித்தார்.

## யாழ். மாநகரசபையை சட்ட...

வருடத்தில் கடைசியான 12 ஆவது கூட்டத்தொடர் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தை குழப்பினால் மாநகர சபை சட்டச்சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியேற்படும் என்ற காரணத்தாலேயே ஆளும் ...ரப்பிலிருந்து ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்நோக்கியுள்ள 2 உறுப்பினர்களைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினர் குழப்பம் விளைவிக்க முயன்றனர். இருந்தபோதிலும் திட்டமிட்டபடி கூட்டம் நடைபெற்று நிறைவடைந்தது.

அத்துடன் மாநகர சபை வரவு செலவுத் திட்டத்துடன் கவிழுமெனவும் சில நாட்களுக்கு முன்னர் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்தார். இது பத்திரிகை ஒன்றிலும் வெளியாகியிருந்தது. நேற்று முன்தினம் மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியும் கோபமுமே மேற்படி கலகம் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டமைக்கு பிரதான காரணமாகும்.

அத்துடன் வருடாந்த ஒளி விழா நிகழ்வு பல்வேறு தரப்பினரின் ஆதரவுடன் மிகவும் சிறப்பான முறையில் மாநகர சபையில் கொண்டாடப்பட்டதால் ஏற்பட்ட வெறுப்புணர்வும்,

மாநகர சபை பாரபட்சமான முறையில் செயற்படுவதாக எவ்வித காரணமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து குழப்பம் விளைவித்தமைக்கு மற்றுமொரு காரணமாக அமைந்திருந்ததை காண முடிந்தது.

இந்தப் பின்னணியுடன் சிறைகளில் வாடுவோரின் விரைவான விடுதலையும் காணாமற்போனோர் தொடர்பான விசாரணையும் அவசியமாகும் என மாநகர சபை உறுப்பினர் விஜயகாந்த் விசேட உரையாற்றி ஜனாதிபதியிடம் கோரிக்கையை முன்வைப்பதென தெரிவித்த வேளை ஆளும் கட்சியான நீங்கள் அரசிடம் எவ்வாறு கேட்கமுடியும்? இணக்க அரசியல் என்பது அரசின் அடிமைத்தனத்துக்கு துணைபோகும் சரணாகதி அரசியலா என்று அப்படியானவர்கள் எந்த அடிப்படையில் சிறையில் வாடுபவர்களை விடுதலை செய்யும்படி ஜனாதிபதியிடம் கோர முடியும் என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விதண்டாவாதம் செய்தனர்.

இதுபோன்ற பல்வேறு தேவையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அநாகரிகமாக நடக்க முற்பட்டு கூட்டத்தை குழப்ப முயன்றனர்.

இந்த நிலையில் இன்றைய கூட்டத்தை நடைபெறவிடாமல் தடுப்பதற்கு எதிர்க்கட்சியினர் முயலலாமென முன்கூட்டியே உணர்ந்த நிலையில் கூட்டம் தொடங்குவதற்கு முன்னரேயே பாதுகாப்பின் நிமித்தம் ஒரு சில பொலிஸார் அழைக்கப்பட்டிருந்தனர்.

கூட்டம் ஆரம்பமாகி நடைபெற்ற வேளை எதிர்க்கட்சியினர் குழப்பம் விளைவித்ததையடுத்து எனது உத்தரவுக்கமைய கலகத்தில் ஈடுபட்ட உறுப்பினர்கள் பொலிஸாரால் தடுக்கப்பட்டனர். இதையடுத்து சபை அமைதி நிலைக்கு வந்தது. இன்றைய கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலின்படியான அனைத்து நிகழ்வுகளும் நிறைவேறிய நிலையில் கூட்டம் முடிவடைந்தது.

## யாழ். மாணவன்....

முறையில் வெளியிடப்பட்டுள்ளன. இந்நிலையில் பரீட்சைப் பெறுபேறுகளை இரத்துச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதனை தெளிவாகக் கூறலாம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய நிலைமையில் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டு மாணவர்களின் எதிர்காலமும் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் பரீட்சை முடிவுகளை இரத்துச் செய்வதானது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## வரிச்சான்றிதழ்...

புகைப்படப் பிரதியொன்றும், பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்து பிரிவில் சமர்ப்பித்தல் வேண்டும்.

## எல்லைதாண்டும்...

எல்லைமீறும் மீனவர்களால் இராஜதந்திர ரீதியிலான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் ஊடுருவி எமது மீன்வளத்தை அள்ளிச் செல்லும் தமிழக மீனவர்களுக்கு எவ்வித தண்டனையும் வழங்கப்படுவதில்லை. மாறாக எமது மீனவர்கள் எல்லைதாண்டினால் இந்தியச் சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்படுகின்றனர்.

எனவே கடல் எல்லையைத் தடுப்பதற்கு கண்காணிப்பு பொறிமுறையொன்று அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார்.

## 15 ஆயிரம்....

நேற்று சந்தித்தனர்.

அரச கொள்கைகளுக்கமைய வருடந்தோறும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு கொள்கை ரீதியில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதன்போது தெரிவித்தார்.

அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட பின்னர் கட்சி பேதங்களின்றி, குறிப்பிட்ட சில மணித்தியாலங்களுக்குள் மக்கள் எதிர்பார்க்கின்ற சேவைகளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு நிர்வாக சேவை ஊழியர்களுக்கு இருப்பதாக ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

## நெல்லியடியில்...

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த தங்கமலர் (வயது - 33), மற்றும் 9 வயதான அவரது மகளும் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நெல்லியடிப் பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எப்.எஸ்)

# நுளம்பு பெருகும் அபாயம் கனகரத்தினம் வீதியில் துர்நாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு கனகரத்தினம் வீதியில் குப்பை கூழங்கள் தேங்கியிருப்பதால் துர்நாற்றம் வீசுவதாக அவ்வீதியால் பயணிக்கும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் நாயன்மார்கட்டு குளம் மற்றும் ஆலயம் அமைந்துள்ளதால் குப்பை கூழங்களையும் இறந்த உயிரினங்களின் எச்சங்களும் வீசப்படுகின்றன. இதனால் குளத்து நீர் மாசடைந்து வருவதாகவும், டெங்கு நோய் பரவுவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, குறித்த பகுதியில் குப்பை கூழங்களைப் போடமால் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளையோ அல்லது, குப்பையை அகற்றுவதற்கான நடவடிக்கைகளையோ உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்று அப்பகுதி மக்கள் ஏக்கத்துடன் எதிர்பார்க்கின்றனர்.

# 26 ஆயிரம் பேரின் மீள்குடியேற்றம் உச்ச நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உயர்பாதுகாப்பு வலயமென இடம்பெயர்ந்தோரில் 26 ஆயிரம் பேர் இதுவரை அவர்களது சொந்த நிலங்களில் மீள்குடியேற அனுமதிக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இவ் விவகாரம் தொடர்பானதொரு அறிக்கையினை உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. காணிகளுக்கு உரித்துடையவர்களிடம் இதுவரை ஒப்படைக்கப்படாத விபரங்கள் இவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கையினை ஏற்றுக்கொண்டுள்ள உச்ச நீதிமன்றம், அதன் ஒரு பிரதியினை சட்டமா அதிபரிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை மீள்குடியேற்றத் திட்டம் தொடர்பான தகவல்களை எதிர்வரும் மார்ச் 4 ஆம் நாள் நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்துமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது ,

36000 குடும்பங்களைச் சேர்ந்த 111 000 வரையான குடும்பங்கள் முன்னர் உயர்பாதுகாப்பு வலயங்களாகவிருந்த பிரதேசங்களில் மீள்குடியேற்றப்பட்டதாக உச்ச நீதிமன்றத்திற்கு அரசாங்கம் முன்னர் தெரிவித்திருந்ததாகவும் கூறப்படுகின்றது.

## காணி, பொலிஸ் அதிகாரம்...

என்ற தலைப்பில் சிறப்பு உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,


முப்பது ஆண்டுகால யுத்தத்திற்கு பிறகு தமிழர்களுக்கு உரித்தான தேசிய உரிமைகளைமுறைப்படி வழங்குவதற்கு சிங்கள தேசிய அரசியல் தலைமைகள் தயாரா, இல்லையா என்று உலகிற்கு அறிவிக்க வேண்டிய வேளை இன்று வந்து விட்டது. தமிழர்களுக்கு பத்து ஆண்டுகளுக்கு முன் உடன்பட்ட அதிகார பரவலாக்களையும் கூட வழங்கக்கூடாது என்ற கொள்கையுடன் உடன்படுகிறோமா? ஆகிய கேள்விகளுக்கு பிரதான தேசிய எதிர்கட்சி தலைவர்கள் பதில் அளிக்க வேண்டும்.

இனப்பிரச்சினையின் இன்றைய தீர்வில்லா நிலைமைக்கு, அரசாங்க கட்சியினர் மட்டும் அல்ல, அனைத்து பிரதான கட்சிகளும் பொறுப்பு கூறவேண்டும். எனவே அரசாங்கத்தின் கடுமையான போக்குகளை தாம் அங்கீகரிக்கின்றோமா, இல்லையா என்பதை பிரதான எதிர்கட்சி தலைவர்கள் சொல்ல வேண்டும். சிங்கள அரசியல் தலைமைகளின் அடிப்படை நிலைப்பாடுகள் என்ன என்பது பற்றி தெரிந்துகொள்ள தமிழர்கள் இன்று விரும்புகிறார்கள்.

சரத் பொன்சேகாவின் விடுதலை பற்றி பேசுபவர்களுக்கு நாம் நீண்ட காலமாக சிறை வாழ்க்கை வாழும் எங்கள் தமிழ் உடன் பிறப்புகளை பற்றி ஞாபகப்படுத்தினாலும் ஞாபகம் வருவதில்லை.

சரத் பொன்சேகாவின் விடுதலை, பாரத லக்ஷ்மன் படுகொலை மற்றும் தெற்கில் காணாமல் போனவர்கள் தொடர்பில் நாம் அக்கறை கொண்டுள்ளோம். இவை சம்பந்தமானபோராட்டங்களில் நாம் முதல் இடம் வகிக்கின்றோம். அதில் பல சந்தர்ப்பங்களில் இங்கே இருக்கும் பல ஜனநாயக வீரர்களை விட நாம் இவற்றில் தீவிரமாக கலந்து கொள்கின்றோம்.

எமது மக்கள் பிரச்சினைகளில் தென்னிலங்கை ஜனநாயக வீரர்களின் போக்கு மிகவும்பாராமுகமாக உள்ளது. இதை தான் நான் ஒற்றைக்கண் ஜனநாயகம் என்று சொல்கிறேன். தென் இலங்கையிலே தமிழர்களின் உணர்வுகளையும் புரிந்து ஏற்றுகொள்ளும் காலம் வரும்வரைக்கும் தென் இலங்கைக்கும் சுதந்திரம் இருக்காது. வட இலங்கைக்கும் சுதந்திரம் இருக்காது. முழு இலங்கைக்கும் உரித்தான பொது போராட்டம் நடைபெற முடியாது.



# மக்களின் அனுபவ அறிவை பெற்று அபிருத்தியைச் செயற்படுத்துங்கள்

## சந்திரகுமார் எம்.பி. ஆலோசனை



(கிளிநொச்சி)

நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்திற்கும் அந்தந்த பிரதேசங்களைச் சார்ந்த மக்களின் அனுபவ அறிவினை பெற்றுக் கொண்டு அதனோடு தொழில் நுட்பத்தையும் இணைத்து செயற்படுத்த வேண்டும் அவ்வாறான திட்டங்களின் மூலமே மக்கள் முழுமையான பயனை பெறமுடியும் என ஈ.பி.டி.பி. உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

300 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட அக்கராயன் குளத்தின் வான் பகுதி வான் பாயத் தொடங்கியதையடுத்து அழிவடைந்தது. இவ் வேலைத்திட்டம் தொடர்பாக அதிகாரிகள் பொதுமக்களை ஒன்றிணைத்து நடத்தப்பட்ட கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் சகிதம் நேற்று அப் பகுதிக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் நிலைமைகளை நேரில் பார்வையிட்டார். அத்தோடு குறித்த விடயம் தொடர்பாக மக்களுடனும் கலந்துரையாடினார். அக்கலந்துரையாடலின் போது மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை கேட்டறிந்த அவர் பாதிப்பினை எதிர்கொண்ட குடும்பங்களுக்கு நட்டஈட்டினை உடன் வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணித்தார். அழிவடைந்த குளத்தின் வான் பகுதியை திட்டமுடிவுத்திகதிக்கு முன்னர் மீளவும் புனரமைத்து மக்களுக்கு சீரான நீர்பாசனத்தினை வழங்க வேண்டுமெனவும் நீர்பாசன திணைக்களத்தினருக்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தினருக்கும் பணிப்புரை வழங்கினார். மேலும் பாதிப்புக்குள்ளான வீதியினை விரைவாக போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் புனரமைக்குமாறும் நேற்று அதற்கான பணிகளை ஆரம்பிக்குமாறும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரை பணித்தார்.

அத்தோடு வரும் 2012 ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் குளத்தின் வான்பகுதிகளை மீளமைப்பதாக அதிகாரிகள் ஒப்புதல் வழங்கினர்.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறீனிவாசன், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்டத் திட்டப் பணிப்பாளர் மோகனபவன், மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் சிவபாதம், கிளிநொச்சி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சுதாகரன், கிளிநொச்சி கமநல சேவை உதவி ஆணையாளர் தயாரூபன், நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் விகிர்தன் மற்றும் 'பீஸ்' திட்டத்தின் பிரதம பொறியியலாளர் சுப்பிரமணியம், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் ஆகியோரும் கிராம சேவையாளர்களும் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கிராமிய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பெரும்திரளான பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# மஹாபொல அதிகரிப்

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல புலமைப் பரிசில் பெறுகின்றவர்களின் எண்ணிக்கையை மேலும் 300 ஆல் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த வருடம் 10,000 மாணவர்களுக்கு மஹாபொல புலமைப் பரிசில் வழங்கப்பட்டதாக கூட்டுறவு மற்றும் உள் வர்த்தக அமைச்சு தெரிவித் ளது.

அந்த எண்ணிக்கையை இ வருடத்தில் 10,300 உயர்த்தியுள்ளதுடன், அதற் 222 மில்லியன் ரூபா மே கமாக ஒதுகப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

# திமிங்கலங்கள் மோதுவதை தடுக்க கப்பல் பாதையை மாற்ற முடியாது



திமிங்கலங்கள் கப்பல்களில் மோதுண்டு உயிரிழப்பதை தடுப்பதற்கான தீர்வாக தெற்கு கடற் பிராந்தியத்தின் கப்பல் மார்க்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் எண்ணம் கிடையாது என கடற்தொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து சுமார் 12 கடல் மைல் தொலைவிலேயே கப்பல் மார்க்கம் அமைந்துள்ளதாகவும் அதனை தொடர்ந்தும் அவ்வாறே பேணிச் செல்ல வேண்டிய தேவையுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

திமிங்கிலங்களைப் பாதுகாப்பதற்காக கப்பல் மார்க்கத்தை மாற்றினால் அம்பாந்தோட்டை துறைமுகத் செயற்பாடுக ளுக்கு தாக்கத் ஏற்படுத்தும்.

கப்பல் மார்க்கத்தை மாற் பட்சத்தில் திமிங்கலங் கப்பல்களில் மோதுவதை தடு முடியுமா என்பது கேள்விக் யாகவே உள்ளது.

திமிங்கலங்களை பாதுகாப் தற்காக மேற்கொள்ள வே டிய நடவடிக்கைகள் தொடர்பா நாரா நிறுவனம் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு வ வதாக அமைச்சர் மேலும் ரத் தெரிவித்துள்ளார்.

# கைதிகளுக்கு பொது மன்னிப்பு சுதந்திர தினத்தில் மட்டுமே!

## சிறைச்சாலை ஆணையாளர் தகவல்

(கொழும்பு)

ஜனவரி மாதம் முதலாம்திகதி சிறைக்கைதிகள் விடுவிக்கப்படவுள்ளதாக வெளியான தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பி. டபிள்யு. கொடிப்பிலி தெரிவித்துள்ளதுடன்,

சுதந்திர தினத்தன்று மாத்திரமே சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்படும் போது வகைப்படுத்தப்பட்டுள்ள 28 குற்றச்செயல்கள் தொடர்பில் குற்றவாளியாக காணப்பட்டவர்களுக்கு எவ்வித மன்னிப்பும் கிடையாது என கிடையாது என தெரிவித்தார்.

அபராதத்தை செலுத்த முடியாமற் போனவர்கள் மற்றும் சிறு குற்றச் செயல்கள் தொடர்பில் சிறைத்தண்டனை அனுபவிப்பவர்கள் தொடர்பில் பொது மன்னிப்பு வழங்கப்படும் போது கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் அமை கப்பட்டுள்ள 33 சிறைச்சா களைச் சேர்ந்த கைதிகள் தொட பாக இதன்போது கவனத்தி கொள்ளப்படுவதாக சிறைச் சாலைகள் ஆணையாளர் நாய கம் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வருடம் சுதந் தினத்தன்று பொது மன்னிப் வழங்கப்படவுள்ள கைதிக தொடர்பாக இதுவரை இறுத் தீர்மானம் மேற்கொள்ளப் வில்லை என அவர் மேலு தெரிவித்துள்ளார்.

# சக்கர நாற்காலிகளுக்கும் வரி விதிப்பு

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக அனுப்பப்பட்ட சக்கர நாற்காலிகளுக்கு இலங்கை சுங்கத்துறை வரி விதித்தமை தொடர்பாக பிரிட்டனைச் சேர்ந்த தொண்டு நிறுவனம் ஒன்று கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

யோக்ஹெயரைச் சேர்ந்த 'பிசியோநெட்' என்னும் தொண்டு நிறுவனம் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக 322 சக்கர நாற்காலிகளை அனுப்பியுள்ளது.

அந்த நாற்காலிகளுக்கு 8000 டாலர்கள் வரை இலங்கை சுங்கத்துறையால் வரி விதிக்கப்பட்டதாகவும், அந்தப் பொருட்களை சுங்கத்துறையில் இருந்து வெளியே கொண்டு செல்வதற்கு சுங்கத்துறை மிகுந்த தாமதத்தை ஏற்படுத்தியதாகவும், அந்த தொண்டு நிறுவனத்தின் தலைவரான பீட்டர் தோம்சன் கண்டனம் தெரிவித்துள்ளார். பிரிட்டனில் உள்ள ஒரு தமிழர் தொண்டு அமைப்பு, ஒரு றோமன் கத்தோலிக்க தேவாலயம் ஆகியவற்றுடன் சேர்ந்து தாம் இந்த சக்கர நாற்காலிகளை இலங்கைக்கு அனுப்பியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், தொண்டு நிறுவனங்களுக்காக கொண்டுவரப்படும் பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களும் இலங்கையில் சுங்கவரிக்கு உட்பட்டவையே என்று இலங்கைச் சுங்கத்துறைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். வடபகுதிக்கான பொருட்களை அனுமதிப்பதற்கு பல அரசாங்க அமைச்சுக்களின் அங்கீகாரம் தேவைப்படுவதாலேயே தாமதம் ஏற்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்

## கடற்றொழிலுக்குச் செல்லலாம்

நாட்டில் வடபகுதி கடற்பிரதேசத்தில் மீன்பிடி மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு செல்லலாமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

'தானே' சூறாவளி தென்னிந்திய பிரதேசத்திற்குள் ஊடறுத்துச் சென்றுள்ளதை அடுத்து அதன் தாக்கம் இலங்கையில் குறைவடைந்துள்ளதாக திணைக்களத்தின் வானிலை அதிகாரி கே. சூரியகுமாரன் தெரிவித்தார்.

இதேவேளை சூறாவளியினால் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சூறாவளியால் மேலும் பலர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

# காதலியை சுட்டுக்கொன்ற பொலிஸ் கொன்ஸ்டபிளும் தற்கொலை

தான் நீண்ட காலமாக உயிருக்கு உயிராக நேசித்து வந்த பெண்ணைச் சுட்டுக் கொன்ற புத்தளம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வரும் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் தன்னையும் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இச் சம்பவம் நேற்று புத்தளம் மதுரங்குளியிலுள்ள அவரது காதலியின் வீட்டில் இடம்பெற்றுள்ளது. குறிப்பிட்ட கான்ஸ்டபிளும் அவரது காதலியும் பேசிக் கொண்டிருந்த அறையை யுவதியின் தந்தை திறந்து பார்த்த போது அங்கு இருவரும் இரத்த வெள்ளத்தில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டனர். இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலரான மண்ணிலவன் மீது குற்றப் பத்திரிகை

புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிரதம பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றினார் என்று கூறப்படும் மண்ணிலவன் என்பவருக்கு எதிராக நேற்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கத்தின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனின் விசேட பாதுகாப்பு அணியின் பிரதம அதிகாரியாகவும் பிரபாகரனின் தனிப்பட்ட பாதுகாப்புப் பிரிவின் கட்டளைத் தளபதியாகவும் (2006 - 2009) வரை மண்ணிலவன் கடமையாற்றினார் என சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதி விசேட பிரமுகர்களுக்கான பாதுகாப்புத் தொடர்பில் இவர் வெளிநாடுகளில் பயிற்சி பெற்றவர் என்றும் குற்றப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி இவர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த போது பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டார். சட்ட மா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று இந்தக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இதனை அடுத்து அவரை ஜனவரி மாதம் பத்தாம் திகதி வரை பூசா முகாமில் தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

# கூட்டமைப்பின் உறுப்பினர்களிடையே பருத்தித்துறை நகர சபையில் முரண்பாடு

## சமரசம் செய்தனர் எதிர்க்கட்சியினர்

(பருத்தித்துறை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வசமுள்ள பருத்தித்துறை நகர சபையில் மாதாந்தக் கூட்டம் இடம்பெற்ற வேளை, அவர்களுக்குள்ளேயே ஏற்பட்ட முறுகல் நிலையை சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சமாதானப்படுத்தி வைத்த சம்பவமொன்று அண்மையில் இடம் பெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

அண்மையில் குறித்த நகர சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் பூபாலசிங்கம் சஞ்சீவன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது கூட்டமைப்பின் ஆளும்கட்சி உறுப்பினரான எஸ்.தவயோகநாதன் எனது கிராமமான அல்வாய் பகுதிக்கு நகரசபை எவ்வித உதவிகளையும் செய்யவில்லை. வீதிகளுக்கு மின்குமிழ்கள் போடப்படவில்லை. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு எவ்வித உதவிகளும் செய்யப்படவில்லை. எனவே தவிசாளராக பதவி வகிப்பதில் எவ்வித தகுதியும் இல்லையென தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.